இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 57 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 19 – வெள்ளிக்கிழமை 06 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 57: Thiruvalluvar Year - 2054 - Purattasi 19 - Friday 06 October 2023 - Madurai 12 Pages ₹ 5.00


## ஜப்பானியர்கள் தொழில் தொடங்க உகந்த மாநிலமாக - வளர்ச்சி மற்றும்

# உற்பத்தித் துறையில் சிறந்து விளங்குகிறது தமிழ்நாடு!

## ‘ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா’ லிமிடெட் நிறுவனம் சார்பில் – உலகளாவிய தொழில்நுட்பம் – புத்தாக்க மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்து உரை!

சென்னை, அக். 6-

**போரூர் அருகே ஜப்பான் நாட்டின் ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், ஜப்பானியர்கள் தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது எனவும், நல்லாட்சியின் அடையாளமாக மாநில வளர்ச்சியிலும் உற்பத்தித் துறையிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது எனவும் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.10.2023) சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால், எரிசக்தித் துறையில் தனித்திறன் வாய்ந்த 2500–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை (Global Technology & Innovation Centre) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கே.கணபதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிளாடியோ ஃபாச்சின், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் என். வேணு, தலைமை தொழில்நுட்ப அலுவலர் உர்ஸ் டோக்வில்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (5.10.2023) சென்னை, போரூரில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மைய திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலகில் ‘ஃபார்ச்சூன் 500’ நிறுவனங்களில் ஒன்றாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைக் கொண்ட குழுமமாகவும், பல்வேறு தொழில் உற்பத்தி மையங்களைக் கொண்டதுமான இந்த ஹிட்டாச்சி நிறுவனம், உலகப் புகழ் பெற்ற தொழில் நிறுவனங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

**எங்கள் ஆட்சிக்குப் பெருமை தரும் ‘ஹிட்டாச்சி’ நிறுவனம்!**

இந்த நிறுவனம், தனது எரிசக்தி உற்பத்தித் திட்டத்தினை கடந்த பிப்ரவரி மாதம் தமிழ்நாட்டில் துவக்கியதன் தொடர்ச்சியாகத்தான் இந்த விழா அமைந்துள்ளது.

இந்தக் குழுமம் தனது உலகளாவிய தொழில்நுட்பமற்றும்புத்தாக்கமையத்தை தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னையில் துவக்க இருக்கும் செய்தியானது, தமிழ்நாட்டிற்கும், எங்கள் ஆட்சிக்கும், எனக்கும் பெருமை தருவதாக அமைந்திருக்கிறது. இதற்காக, உங்கள் குழுமத்திற்கும், ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை பொறுப்பு அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வல்லுநர்களுடன் ஆலோசனை!**

ஏழே மாத இடைவெளியில், தமிழ்நாட்டில் நீங்கள் துவங்கி இருப்பது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதற்கான அடையாளம். எங்கள் ஆட்சி மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு, என்னுடைய நன்றி! இந்த நம்பிக்கையை மேலும் வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்.

**ஏழே மாத இடைவெளியில், தமிழ்நாட்டில் நீங்கள் துவங்கி இருப்பது, தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதற்கான அடையாளம். எங்கள் ஆட்சி மீதும், எங்கள் தமிழ்நாட்டின் மீதும் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு, என்னுடைய நன்றி! இந்த நம்பிக்கையை மேலும் வளர்க்க நாங்கள் விரும்புகிறோம். பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்.**

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல பொருளாதார வல்லுநர்களுடன் கலந்தாலோசனைகள் மேற்கொண்டு, எங்களது அரசு பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம். வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறோம்.

அந்த வகையில் மாநிலத்தில்,

- ❖ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்,
- ❖ புத்தாக்கத் திட்டங்கள்,
- ❖ திறன் மேம்பாட்டு மையங்கள்

ஆகிய திட்டங்களை பெருமளவில் ஈர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டினோம்.

**தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை!**

இவ்வாறான செயல்பாடுகள் மூலம், இந்தத் துறையில் பெருமளவு முதலீடுகளை ஈர்ப்பதற்கான எங்கள் தரப்பு முயற்சியே இது. உலக அளவில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சிக்கு ஏற்ப, நமது தொழில் துறையும், மாற்றங்களை மேற்கொண்டு அதே வேகத்தில் பயணம் மேற்கொள்வது இன்றியமையாத ஒன்று. இதற்கான முயற்சிகளை ஊக்கப்படுத்தி, இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்தில்தான், “தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022” கடந்த ஆண்டு ஜுலை மாதம் என்னால் வெளியிடப்பட்டது.

**உலகளாவிய திறன் மையங்கள் அதிகரித்துள்ளன!**

இந்தக் கொள்கை வெளியிட்ட பிறகு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புத்தாக்கம், புத்தொழில்கள் மற்றும் உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. தொழில்துறை, கல்வியாளர்கள், புத்தாக்கம் மேற்கொள்வோர் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இது மிகப்பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான உலகளாவிய திறன் மையங்கள் (குளோபல் கேப்பபிலிட்டி சென்டர்ஸ்) அதிகரித்துள்ளது.

**1 டிரில்லியன் பொருளாதார மாநிலம் எனும் நமது இலக்கு!**

கடந்த இரண்டு ஆண்டுகளாக, முப்பதுக்கும் மேற்பட்ட GCCக்கள், தமது புதிய

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

---

## அரசியல் நோக்கத்திற்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு

# விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்துவதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக்.6-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகவலைதளப் பதிவில் எதிர்க்கட்சிகள் மீது ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் எல்லைகளற்று நீளுகிறது எனவும், அரசியல் நோக்கத்திற்காக விசாரணை அமைப்புகளை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்துகிறது என்றும் சட்டத்தையும், மக்களாட்சியையும் துச்சமாக மதித்து செயல்படுவதில் பா.ஜ.க. குறியாக இருக்கிறது எனவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் எல்லைகளற்று நீளுகிறது.

ஆம் ஆத்மி கட்சி எம்.பி சஞ்சய் சிங் அவர்களின் கைதும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் அவர்களின் இல்லத்தில் நடந்த சோதனைகளும் சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய விசாரணை அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படி அரசியல் நோக்கத்துடன் இந்தியா கூட்டணித் தலைவர்களுக்கு எதிராகத் தவறாகப் பயன்படுத்திக்கொள்கிறது என்பதற்கான தெள்ளத்தெளிவான எடுத்துக்காட்டுகளாகும். எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான இத்தகைய திட்டமிட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல். அமலாக்கத்துறை வெளிப்படைத்தன்மையோடும் நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் எச்சரித்துள்ளதை பா.ஜ.க வசதியாக மறந்து விடுகிறது. ஆனால், சட்டத்தையும் மக்களாட்சியையும் துச்சமாக மதித்துச் செயல்படுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளிடையே தொடர்ந்து வளர்ந்து வரும் ஒற்றுமையைக் கண்டு பா.ஜ.க அஞ்சி நடுங்குவது இதன் மூலம் நன்கு தெரிகிறது. பழிவாங்கும் நடவடிக்கைகளை விடுத்து உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்க அவர்கள் கவனம் செலுத்துவது நல்லது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## நேபாள நிலநடுக்கம் காரணமா ?

# 402 ஏக்கரில் இருந்த சிக்கிம் ஏரி 149 ஏக்கராக சுருங்கியது!

## இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்!

பெங்களூரு, அக்.6-

மேகவெடிப்பால் தண்ணீர் வெளியேறி சிக்கிம் மாநிலத்தில் உள்ள லோனாக் ஏரியின் பரப்பளவு 2 மடங்கு குறைந்ததாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. கடந்த மாதம் 17ம் தேதி எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்களில் 402 ஏக்கர் அளவிற்கு இருந்த தெற்கு லோனாக் ஏரியின் பரப்பளவு 28ம் தேதி 413 ஏக்கர் அளவிற்கு விரிவடைந் துள்ளது. அதைத் தொடர்ந்தே ஏரி உடைந்து தண்ணீர் வெளியேறி பெரு வெள்ளம் ஏற்பட்ட நிலையில், தற்போது ஏரியின் பரப்பளவு 149 ஏக்கராக சுருங்கி உள்ளது. பனிப்பாறைகள் சூழ்ந்த லோனாக் ஏரியால் இது போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படலாம் என கடந்த 10 ஆண்டுகளாகவே பல அரசு நிறுவனங்கள் மற்றும் அறிவியல் ஆய்வுகள் எச்சரித்து வந்தனர்.

அதே நேரத்தில் நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்த சம்பவங்கள் நடந்ததா எனவும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். நேபாளத்தில் அடுத்தடுத்து 5 நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெரிய அளவில் உணரப்பட்டது. நிலநடுக்கம் ஏற்பட்ட மறுநாளே சிக்கிம் மாநிலத்தில் லோநாக் ஏரி பகுதியில் திடீரென மேக வெடிப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக கனமழை கொட்டத் தொடங்கியது. சில மணி நேரம் நீடித்த கனமழை காரணமாக லாசென் பள்ளத்தாக்கில் உள்ள டீஸ்டா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேலும் சுங்தாங் அணையும் உடைந்தது. மேக வெடிப்பினால் ஏற்பட்ட கனமழை, வெள்ளப்பெருக்கில் சிக்கி 40 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 22 ராணுவ வீரர்கள் உட்பட 120 பேர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு மாயமாகி உள்ளனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 06-10-2023

# மகளிர் இடஒதுக்கீட்டில் சதி அரசியல்

“என் பெயரில் வீடு எதுவும் இல்லை. ஆனால் நாட்டின் லட்சக்கணக்கான மகள்களை வீட்டு உரிமையாளர் ஆக்கியுள்ளது பா.ஜ.க. அரசு” என்று தனக்குத்தானே பாமாலை சூட்டிக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு பிரதமர் நரேந்திரமோடி அவர்கள்.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை பிரதமர் மோடி வழங்கி விட்டதாக நினைத்துக் கொண்டு அவருக்கு குஜராத் மாநிலத்தில் பெண்கள் சார்பில் பாராட்டு விழா நடந்துள்ளது. குஜராத் மாநிலம் வதோராவில் பா.ஜ.க. சார்பில் இந்த பாராட்டு விழா நடந்துள்ளது. இதில் பேசும்போது, பெண்கள் இடஒதுக்கீடு குறித்து தவறான பிம்பத்தைக் கட்டமைக்கிறார் பிரதமர்.

“பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேறாமல் இருக்க கடந்த 30 ஆண்டுகளாக பல்வேறு தந்திர வேலைகளில் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஈடுபட்டு வந்தனர். இப்போதும் கூட, பெண்கள் மீதான அச்சத்தால் இடஒதுக்கீடு மசோதாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஒரு தயக்கத்தில்தான் மசோதாவை ஆதரித்துள்ளனர். அவர்களின் அணுகுமுறை ஒருபோதும் மாறாது. மகளிர் இடஒதுக்கீடு மசோதா, நிறைவேற்றப்பட்டு விட்டதால் ஜாதி, மத ரீதியில் பெண்களைப் பிளவுபடுத்தும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அவர்களின் சதி குறித்து மகளிர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்” என்று பேசி இருக்கிறார். இவை அனைத்தும் பொய் முலாம் பூசப்பட்டவை அல்ல, மொத்தத்தில் பொய் மூட்டை ஆகும்.

அகில இந்திய மஜ்லிஸ் என்ற கட்சியைத் தவிர ஒட்டுமொத்தமாக இந்திய மக்களவையிலும் - மாநிலங்களவையிலும் இருந்த அனைத்துக் கட்சிகளும் ஆதரித்து வாக்களித்ததுதான் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் ஆகும். எந்த முக்கியக் கட்சியும் எதிர்த்து வாக்களிக்கவும் இல்லை. அதனைத் தடுத்து சதி செய்யவும் இல்லை. அந்த மசோதாவுக்கு எதிராகப் பேசவும் இல்லை.

**எந்தக் கட்சிகளுக்கும் அந்த மசோதாவை ஆதரிப்பதற்கான தயக்கம் இல்லை. நடுக்கம் இல்லை. தடுமாற்றம் இல்லை. எனவே பயந்துதான், அதனை ஆதரித்தார்கள் என்பதும் பொய்யாகும். ஏதாவது முக்கியக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தால், அதனை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டு விடலாம் என்று பா.ஜ.க. தலைமை நினைத்தது. அதன் நினைப்பில் எதிர்க்கட்சிகள் சேர்ந்து மண்ணைப் போட்டு - நிறைவேற்ற வைத்து விட்டார்கள். அதுதான் முழு உண்மை.**

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் - 33 விழுக்காடு பெண்களுக்கு கிடைத்து விடக் கூடாது என்ற சதி எண்ணத்தோடுதான் பா.ஜ.க. கொண்டு வந்துள்ளது. ‘இனி நடைபெற இருக்கும் நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு’ என்று இந்தச் சட்டம் சொல்லவில்லை. பிரதமர் மோடி அவர்கள், தடையே இல்லாமல் நிறைவேற்றும் வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை.

★ மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பிறகு

★ அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு - என்ற இரண்டு மாபெரும் தடுப்புச் சுவர்களை எழுப்பி இருக்கிறார். இதுதான் பெண்களுக்கு எதிரான சதிச் செயல் ஆகும்.

பெண்களுக்கான உரிமையை பா.ஜ.க. எப்போதும் வழங்காது. பிரதமராக இந்திரா காந்தி அம்மையார் பொறுப்பேற்றபோது, அவர் பெண் என்பதற்காகவே கண்டித்து எழுதியது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வ இதழான ‘ஆர்க்கனைசர்’. இன்றும், குடியரசுத் தலைவராக இருக்கும் திரவுபதி முர்மு அவர்களை எப்படி எல்லாம் அவமானப்படுத்தி வருகிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம். சூத்திரர்களையும் பெண்களையும் இழிவான தன்மையில் அடையாளப்படுத்தியவர்கள் இவர்கள். அதனால், பெண்களுக்கான உரிமையை அவ்வளவு சீக்கிரம் தூக்கிக் கொடுத்து விடமாட்டார்கள் பா.ஜ.க.வின் தலைமையினர்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பும் - தொகுதி வரையறையும் முடிந்த பிறகு என்றால் 2029 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் 33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்குக் கிடைக்கும். 2029 ஆம் ஆண்டு - அதாவது இன்னும் 6 ஆண்டுகள் கழித்து நிறைவேறப்போகிற சட்டத்தை - இன்று நிறைவேற்றி விட்டதாக கணக்குக் காட்டி - கண்கட்டி வித்தை காட்டுகிறார் பிரதமர்.**

2029 ஆம் ஆண்டுகூட இது நிறைவேறாது என்று சொல்லி இருக்கிறார் முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம். ‘இந்தச் சட்டமே கேலியான மாயை. இது கிண்ணத்து தண்ணீரில் தெரியும் நிலவின் பிரதிபலிப்பு’ என்று அவர் சொல்லி இருக்கிறார். 2021 ஆம் ஆண்டு எடுக்கவேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பே இன்னும் எடுக்கப்படவில்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது மிகப்பெரிய வேலை. அதன் முடிவுகளை வெளியிடவே இரண்டு ஆண்டுகள் ஆகும். இன்னும் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கான தேதியையே இவர்கள் வெளியிடவில்லை. தொகுதி வரையறையை 2026 வரைக்கும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு நடந்த தொகுதி வரையறையே 6 ஆண்டுகள் ( 2002-2008) நடந்தது. எனவே, இந்தச்சட்டத்தை 2029 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த இயலாது - என்று மிகத் தெளிவாக, மோடி ஆட்சியின் மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தின் முகத்திரையைக் கிழித்திருக்கிறார் ப.சிதம்பரம்.

**1996 ஆம் ஆண்டு - 2010 ஆம் ஆண்டு - கொண்டு வரப்பட்ட சட்டங்களில் இதுபோன்ற தடைச்சுவர்கள் இல்லை. என்றால் இப்போது இத்தடைகளை உருவாக்கியது யார்? எதிர்க்கட்சிகள் அல்ல. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்தான் இந்த தடைச்சுவரையும் எழுப்பியவர்கள்.**

**எந்தத் தடையும் இல்லாமல் பா.ஜ.க. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்து - எதிர்க்கட்சிகள் இந்த நிபந்தனையைச் சேர்க்கச் சொல்லி இருந்தால் - பிரதமர் குற்றம் சாட்டலாம். அப்படி எதுவும் நடக்கவில்லை. எனவே பெண்களுக்கு உரிமை கிடைக்கக் கூடாது என்பதே பிரதமர் மோடியின் சதித் திட்டம் ஆகும்.**

அதிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்க மறுப்பது என்பதும், பா.ஜ.க.வின் உயர்வகுப்பு எண்ணத்தின் வெளிப்பாடுதான். அரசியல் அதிகாரத்தை மேல்மட்டத்திலேயே வைத்துக் கொள்ள நினைக்கும் சதிச் செயல்தான் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஆசிய விளையாட்டுப் போட்டி!

## தமிழ்நாடு வீரர் உட்பட 3 பேருக்கு தங்கம்!

*ஹாங்சோ, அக். 6 -*

*ஆசிய விளையாட்டு போட்டியில் தமிழக வீரர் உட்பட 3 பேர் தங்கப் பதக்கம் வென்றனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் இந்தியா 3 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலம் என 12 பதக்கங்களை வென்றது.*

*19வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 11வது நாளான நேற்று முன்தினம் ஆடவருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா 88.88 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீரரான கிஷோர் குமார் ஜெனா 87.54 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார்.*

*ஆடவருக்கான 4x400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் அனஸ் முகமது யாஹியா, அமோஜ் ஜேக்கப், முகமது அஜ்மல் வாரியதோடி, ராஜேஷ் ரமேஷ் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி, பந்தய தூரத்தை 3:01.58 விநாடிகளில் கடந்து தங்கம் வென்றது.*

*வில்வித்தையில் காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் ஜோதி சுரேகா, ஓஜாஸ் டியோடலே ஜோடி, தென்கொரியாவின் சோ சேவோன், ஜூ ஜாஹூன் ஜோடியை 159158 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதல்வர் அவர்கள் நிறைவு உரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 2,500க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு! ஜப்பான் நாட்டு ஹிட்டாச்சி குழுமத்தின்

# உலகளாவிய தொழில்நுட்ப - புத்தாக்க மையம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார்!

சென்னை, அக். 6-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.10.2023) சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால், எரிசக்தித் துறையில் தனித்திறன் வாய்ந்த 2500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை (Global Technology & Innovation Centre) திறந்து வைத்தார்.

**பொருளாதார குறியீட்டில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்!**

தமிழ்நாடு பல பொருளாதார குறியீடுகளில் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்நிலையை தக்க வைத்துக் கொள்ளவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுடன், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

வணிக நடைமுறைச் சட்டம் / விதிகளில் பெருமளவிலான சீர்திருத்தங்களை மேற்கொண்டு, அனுமதிகள் பெறுவதை இலகுவாக்கியதன் விளைவாக, தொழில் செய்வதற்கு உகந்த மாநிலங்களின் தரவரிசையில், 14ஆம் இடத்திலிருந்த தமிழ்நாடு, வெகுவாக முன்னேறி தற்போது 3ஆம் இடத்தை பெற்றுள்ளது. குறிப்பிட்ட ஒரு சில துறைகளை மட்டும் சார்ந்து இல்லாமல், பல்வேறு துறைகள் குறிப்பாக வளர்ந்துவரும் துறைகளான மின் வாகனங்கள், மின்கலன்கள், பசுமை எரிசக்தி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிப்பதற்கு, துறைவாரியாக கொள்கைகளை வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசு, உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட தொழில் பூங்காக்களையும் (Sector Specific Policies) அமைத்து வருகிறது.

**ஒரு டிரில்லியன் அளவிற்கு பொருளாதார வளர்ச்சிக்கு நடவடிக்கை!**

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை எய்துவதற்காக, உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியதன் விளைவாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளின் அடுத்த கட்டமாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை 2024ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், சென்னையில் சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மேற்கொண்டு வருகின்றது.

**ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட்**

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமம், உலகெங்கிலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட துணை நிறுவனங்களைக் கொண்ட உலகளாவிய ஃபார்ச்சூன் (Global Fortune) 500 நிறுவனங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. அதன் துணை நிறுவனங்களில் ஒன்றான ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனம், சுவிட்சர்லாந்தினை தனது தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இதன் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் முன்னதாக பிப்ரவரி 2023ல், தனது எரிசக்தி திட்டத்தினை சென்னையில் தொடங்கியுள்ளது.

தற்போது, இந்நிறுவனம், சென்னை, போரூரில் ஒரு உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை அமைத்துள்ளது. 3 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தில், சுமார் 50,000 சதுர அடியில் ஒரு பிரத்யேக ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எரிசக்தித் துறையில் முனைவர் பட்டம் மற்றும் முதுகலை பட்டம் பெற்ற 2500 தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் இந்த உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை இன்று திறந்து வைத்தார். மேலும், முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ, மாணவியர்களுக்கு அந்நிறுவனத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களையும் வழங்கினார்.

**தமிழ்நாட்டில் 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள்!**

கடந்த இரண்டு ஆண்டுகளில், 30க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centres GCCs) தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. உலகளவில் தமிழ்நாட்டின் போட்டித்தன்மையை வெகுவாக அதிகரிக்க இவை பெரிதும் உதவும்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கே.கணபதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிளாடியோ ஃபாச்சின், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் என்.வேணு, தலைமை தொழில்நுட்ப அலுவலர் உர்ஸ் டோக்வில்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.10.2023) சென்னை, போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழுமத்தின் துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தை (Global Technology & Innovation Centre) திறந்து வைத்து, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ, மாணவியர்களுக்கு அந்நிறுவனத்தில் உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கான பயிற்சி (Internship) பெறுவதற்கு அனுமதி கடிதங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் கே. கணபதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிளாடியோ ஃபாச்சின், ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் என்.வேணு, தலைமை தொழில்நுட்ப அலுவலர் உர்ஸ் டோக்வில்லர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மக்களுக்கும் அரசுக்கும் இடையே

# அதிகாரிகள் பாலமாக இருக்க வேண்டும்!

### மாவட்ட ஆட்சியர்கள் 2-ஆம் நாள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, அக். 6 –**

**‘‘மாவட்ட நிர்வாகத்தை வழி நடத்தும் பொறுப்பில் உள்ள நீங்கள் மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருக்க வேண்டும். வழக்கமான நடைமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து கால தாமதத்தை தவிர்க்கும் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்’’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது நாளாக நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வலியுறுத்தியுள்ளார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதல்வர் அவர்கள் ஆற்றிய நிறைவுரை வருமாறு:–**

நேற்று தொடங்கிய இந்த மாநாட்டினுடைய இரண்டாம் நாளாகிய இன்று நாம் பல்வேறு துறைகளைச் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நல்லதொரு பயனுள்ள கலந்தாய்வினை மேற்கொண்டோம்.

கொரோனா பெருந்தொற்று, கனமழை போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து மீண்டு, அதற்குப் பிறகு நமக்குக் கிடைத்த ஒன்றரை ஆண்டு காலத்தில், சிறப்பான திட்டமிடல், செயலாக்கம் மற்றும் நிதி மேலாண்மையின் மூலமாக இன்றைக்கு மாநிலத்தின் பொருளாதாரத்தை சரியான வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறோம். இந்தச் சவாலான பணியில் நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருவதை நான் நன்றி உணர்வோடு இங்கே நினைவு கூர விரும்புகிறேன்.

நமது அரசு, சிறந்தொரு நிர்வாகத்தை மக்களுக்கு வழங்கிட நிர்வாகரீதியில் எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். நமது நிருவாகக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தவும், தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளவும், மக்கள் பயனடையவும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களை களப்பணியாற்றும் உங்களிடமிருந்து பெறுவதற்காகவும்தான், இதுபோன்ற மாநாடுகள் மிகவும் அவசியமாக அமைகிறது.

**சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்து செயல்படுவீர்!**

எந்தவொரு திட்டத்தையும் முதலமைச்சரின் திட்டமாக, ஒரு கட்சி சார்ந்த திட்டமாகக் கருதாமல், அலுவலர்கள் அனைவரும் தங்கள் கனவுத் திட்டமாக, மக்களுக்கான திட்டமாக நினைத்து, அதை முழு ஈடுபாட்டோடு நிறைவேற்றினால்தான் அது மக்களுக்கு நன்மை பயக்கும். அப்போதுதான், அந்தத் திட்டத்தின் பயன் என்பது மிகப் பெரிய அளவில் இருக்கும்; உரிய முறையில் மக்களுக்கும் போய்ச் சேரும். அதனால்தான் திட்டங்களை அதிகாரிகளின் குழந்தைகள் என்பார்கள். அதிகாரிகள் நினைத்தால் அவை வளரும்; அதிகாரிகள் புறக்கணித்தால் அது மெலியும். அதிகாரிகள் என்பவர்கள் தனி மனிதர்களாக இருக்க முடியாது; செயல்படவும் முடியாது. அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இருந்து சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்து செயல்பட வேண்டும். அத்தகைய காலம்தான் பொற்காலமாக அமையும். அதுவே தலைசிறந்த ஆட்சியாகவும் அமையும்.

மாவட்ட ஆட்சியர்களின் மிக முக்கியமான பங்களிப்பு என்பது, அவர் எவ்வாறு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, நிருவாகத்தை கொண்டு செல்கிறார் என்பதில்தான் உள்ளது. நீங்கள்தான் மாவட்ட நிருவாகத்தின் தலைவர். உங்களால்தான் மாவட்டத்தில் இயங்கும் அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைக்க இயலும். அதனை நீங்கள் திறம்படச் செய்து, அரசுத் திட்டங்களின் மூலம் மக்கள் முழுப் பயனையும் பெறச் செய்ய வேண்டும்.

திட்டங்களை வகுக்கவும், அவற்றை நிறைவேற்ற உரிய வழிமுறைகளைச் சொல்லவும், துறை சாரா வல்லுநர் குழுக்களும் அவ்வப்போது அமைக்கப்பட்டு, ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன. அதேபோல், மாநில கொள்கை வளர்ச்சிக் குழுவும், பல்வேறு ஆலோசனைகளின் மூலமாக அரசை வழி நடத்திட உதவி வருகிறது.

**மகளிர் உரிமைத் தொகை திட்டம் மிகப்பெரிய சாதனை!**

அந்த வகையில், நமது அரசின் முன்னோடித் திட்டங்களில் ஏழையெளிய மக்களிடையே, குறிப்பாக, மகளிரிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். சிறப்பு வாய்ந்த இந்தத் திட்டம், கடந்த மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் ஏறக்குறைய ஒரு கோடியே அறுபத்து மூன்று இலட்சம் மகளிருக்கு, எந்தவித சிரமமுமின்றி, சீரிய முறையில் விண்ணப்பங்களை வழங்கி, பின்னர் பூர்த்தி செய்த படிவங்களைத் திரும்பப் பெற்றதே மாபெரும் சாதனையாகும்.

அதுமட்டுமல்ல; பெறப்பட்ட அந்த விண்ணப்பங்களைக் குறைந்த காலத்திற்குள் ஏற்கனவே உள்ள தரவுகளுடன் கணினி தொழில் நுட்ப உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதன்மூலம் தகுதியுள்ள சுமார் ஒரு கோடியே ஆறு இலட்சம் மகளிர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுடைய வங்கிக் கணக்கில் உரிமைத் தொகை ரூபாய் ஆயிரத்தை வரவு வைத்தது அதைவிடப் மிகப் பெரிய சாதனையாகும். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் உரிய பயனாளிகளை வெளிப்படையான தரவு சார்ந்த மேலாண்மை மூலம் தேர்ந்தெடுத்த முறை இந்திய வரலாற்றில், ஒரு முன்மாதிரியான முன்னெடுப்பாக விளங்கும். நமது மாநிலத்தின் நிர்வாகத் திறமையை உலகிற்கே எடுத்துரைக்கும் மற்றுமொரு சான்றாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட முறை.

மகளிர் உரிமைத் தொகை பெற்ற மகளிரின் முகங்களிலே நீங்கள் கண்ட மலர்ச்சி, நிச்சயம் உங்களின் உழைப்பின் வெகுமதி. இத்திட்டம் குறிப்பிட்ட நாளில் வெற்றிகரமாக துவங்கிட சிறப்பான பங்களிப்பை வழங்கிய மாவட்ட ஆட்சியர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், இத்திட்டத்தில் விடுபட்டவர்கள் தற்போது விண்ணப்பம் அளித்து வருகிறார்கள். அவற்றையெல்லாம் முறையாக, விரைவாகப் பெற்று, ஆய்வு செய்து, அவற்றின்மீது விதிகளின்படி தீர்வு காண வேண்டுமென்றும் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அரசின் திட்டங்கள் மீது தனிக்கவனம் செலுத்திடுவீர்!**

நமது அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள் வரை பல சிறப்பான முன்னோடித் திட்டங்களை தொடங்கிச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். குறிப்பாக, இந்தியாவுக்கே முன்னோடித் திட்டங்களாக, மகளிருக்கான விடியல் பயணம் மக்களைத் தேடி மருத்துவம் ‘இல்லம் தேடிக் கல்வி’ ‘இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48’ – புதுமைப்பெண் நான் முதல்வன் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் கலைஞரின் ஒருங்கிணைந்த அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் ஊட்டச்சத்தை உறுதி செய் போன்ற திட்டங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதில் குறிப்பாக, மாணவர்களின் காலை உணவுத் திட்டத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தில் உங்களது தனிப்பட்ட பங்களிப்பைப் பாராட்ட விரும்புகிறேன். இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட நீங்கள் இதில் தொடர்ந்து தனிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்ற நமது அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செம்மையாக, விரைந்து செயல்படுத்தி வரும் உங்கள் அனைவருக்கும் இந்தத் தருணத்தில் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், சில திட்டங்களில் அவ்வப்போது காணப்படும் சுணக்கத்தையும் நான் அடிக்கடி ஆய்வுக் கூட்டங்களின் வாயிலாக உங்களுக்குச் சுட்டிக்காட்டியும் இருக்கிறேன். அவற்றையெல்லாம் நீங்கள் மனதிலே நிலைநிறுத்தி, குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கால நிர்ணயம் என்ன என்பதை அறிந்து, அந்தக் காலத்திற்குள் அவற்றை முடித்திட வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மாவட்ட நிர்வாகம் தொய்வில்லாமல் பணியாற்ற வேண்டும்!**

நமது மாநிலத்தில் தொழில் துறையின் வளர்ச்சிக்காக பல கொள்கைகளையும் வெளியிட்டு, அந்நிய முதலீட்டாளர்களை நமது மாநிலத்திற்கு ஈர்த்து, அதன்மூலம் நமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெருக்கிட அரசு அரும்பாடுபட்டு வருகிறது. ஒட்டுமொத்தமாக, நம்முடைய திட்டங்களின் மூலம் கல்வி, சமூகம், பொருளாதாரம் என்ற அனைத்துத் தளங்களிலும் நம்முடைய மாநிலம் தற்போது சரியான பாதையில் நடைபோட்டு வருகிறது.

நான் முன்னர் குறிப்பிட்ட திட்டங்களை மட்டுமல்ல; இந்த அரசின் மற்ற திட்டங்களின் பலன்கள் உரியவர்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமானால், மாநில நிர்வாகம் மட்டுமல்ல, மாவட்ட நிர்வாகமும் தொய்வில்லாமல் தொடர்ந்து பணியாற்றிட வேண்டும். ஏழை, எளிய மக்களிடம் நேரடி தொடர்பில் நீங்கள் இருக்க வேண்டும். திட்ட ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவது மட்டுமல்லாமல், அதன் பலன் எந்தளவு மக்களைச் சென்றடைந்துள்ளது; அதில் அவர்கள் சந்திக்கும் சிக்கல்கள் என்ன என்பதை எல்லாம் நீங்கள் நேரடியாக அறிந்து, அவற்றை நீக்கிட வேண்டும்.

**மாதந்தோறும் நிலம் தொடர்பான பிரச்சினைக்கு ஆய்வுக் கூட்டம்!**

பல மாவட்டங்களில் நிலம் தொடர்பான பிரச்சினைகள், குறிப்பாக, நிலத்தை அளந்து காட்டுதல், பொது நிலத்தைப் பயன்படுத்துதல், கோயில் நிலங்கள் போன்ற பல விஷயங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்ந்து காணப்படுகின்றன. சில சமயங்களில் அவை சட்டம்ஒழுங்குப் பிரச்சினையாகவும் மாறி விடுகிறது. எனவே, நில அளவைத் துறை, வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் காவல் துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மாதந்தோறும் நிலம் தொடர்பான பிரளச்சினைகளுக்கென மட்டுமே ஆய்வுக் கூட்டம் நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடிக்கடி அரசு மருத்துவமனைகளை ஆய்வு செய்யுங்கள். அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவச் சேவைகளின் தரம் குறித்து கேட்டு அறியுங்கள். அதேபோல், மருத்துவர்களுக்கும் சில தேவைகள் இருக்கலாம்; அவற்றையும் அறிந்து தீர்வு காணுங்கள். கல்வியும், மருத்துவமும் இந்த அரசின் இரு முக்கியமான முன்னுரிமைப் பிரிவுகள் என்பதை உணர்ந்து பணியாற்றுங்கள்.

**கிராம நிர்வாக அலுவலர்கள் அளவில் ஆய்வுக் கூட்டங்கள்!**

அடுத்தபடியாக, பல்வேறு அரசுத் திட்டங்கள் தொடர்பாக வழங்கப்படும் சுற்றறிக்கைகளின் முழு விவரங்கள் சில சமயங்களில் அனைத்து கிராம நிருவாக அலுவலர்களையும் சென்றடைவதில்லை என்று கேள்விப்பட்டேன். அரசு திட்டங்களின் விவரங்களை முழுமையாக அவர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும், நடைமுறையில் காணும் சிக்கல்கள் குறித்தும் அறிந்து கொள்ள அவ்வப்போது கிராம நிருவாக அலுவலர்கள் அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதும் நல்ல பலனை அளிக்கும் எனக் கருதுகிறேன். “ஏழை, எளிய மக்களுக்கு நலம் தரும் திட்டங்களில் எந்தத் தொய்வும், தாமதமும் இன்றிப் பணியாற்றுங்கள்” என்பதுதான் எனது அன்புக் கட்டளை. அதனை நீங்கள் மனதிலே கல்வெட்டாகச் செதுக்கி வைத்துக் கொண்டு செயல்பட்டால் தமிழ்நாட்டு மக்களுக்கு அது வளர்ச்சியைத் தரும்; மகிழ்ச்சியைத் தரும்.

அரசு செயல்படுத்தும் சில திட்டங்களில் சிறுசிறு குறைகள் ஊடகங்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் சில சமயங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மகளிருக்கான விடியல் பயணத்தில் பேருந்துகளின் எண்ணிக்கை மற்றும் தரம், மருத்துவ சேவைகளின் தரம், சாலைக் கட்டமைப்பு வசதிகளில், கழிவுநீர் கட்டமைப்புகளில் அரசிடமிருந்து பெற வேண்டிய அனுமதிகள், சான்றுகள் என்று குறிப்பிட்ட சில சேவைகளில் மக்களுடைய எதிர்பார்ப்பு முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

முதல்வரின் முகவரி துறையிலும், மேலும், நான் மாவட்டங்களில் மேற்கொள்ளும் பயணங்களிலும் தொடர்ந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு முக்கியத்துவம் தாருங்கள். மேற்குறிப்பிட்ட அரசு சேவை குறைபாடுகள் எல்லாம் களையப்பட வேண்டுமென்றால், தலைமைச் செயலகத்தில் அமர்ந்து கொண்டு ஆணைகள் பிறப்பித்தால் மட்டும் போதாது. அந்த ஆணைகளின் செயலாக்கத்திற்கு மாவட்ட நிர்வாகமும், முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மாநில நிர்வாகம் எப்படி மாவட்ட நிர்வாகத்தை சார்ந்துள்ளதோ, அது போன்று மாவட்ட நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட அனைத்து வட்டங்களிலும் / வட்டாரங்களிலும் உள்ள அலுவலர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்திடல் வேண்டும். இந்த நோக்கத்தில் தான், “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின் மூலம் மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று அங்கு செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்களை பற்றியும், சட்டம்ஒழுங்குப் பிரச்சனைகளை பற்றியும், நானே நேரடியாக ஆய்வு செய்து விவாதித்து வருகிறேன்.

**சமூகக் குற்றங்களை சகிக்க முடியாது!**

ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அது, பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை. இது ஒரு சமூகக் குற்றம். இந்த அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான, எந்தவகையாக வன்முறையையும் சகித்துக் கொள்ளாது – கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இவ்வகைக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் புகார் மனு அளிக்கிறார்கள். இதன்மீது எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை நீங்கள் மாதம் ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும். இதற்கென ஒரு ஆய்வு நடைமுறையை உள்துறைச் செயலாளர் அவர்கள் வடிவமைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறைத் தலைவருக்கும் வழங்கி, அடுத்த மாதம் முதலே செயல்படுத்திடக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசின் பல்வேறு திட்டங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் பொதுவானதாக இருந்தாலும், சில மாவட்டங்களுக்கு, அம்மாவட்டங்களுக்குரிய சமூக, பொருளாதார சூழ்நிலைகளின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சனைகளும் இருக்கத்தான் செய்யும். அத்தகைய பிரச்சனைகளை, அதற்கான தீர்வுகளை விவாதிக்கின்ற களமாக இம்மாநாடு உங்களுக்கு அமைந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மாவட்ட நிருவாகத்தை வழிநடத்தும் பொறுப்பில் உள்ள நீங்கள், மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக இருக்க வேண்டும். வழக்கமான நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, காலதாமதத்தைத் தவிர்க்கும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

சமீபத்தில், அரசுத் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் போது, அரசு அலுவலர்கள் தங்களைக் காண வரும் பொது மக்களை உட்கார வைத்து, அவர்கள் குறைகளைக் கேட்டறிய வேண்டும். அதிலேயே அவர்களுடைய பாதி குறை தீர்ந்த திருப்தி அவர்களுக்கு ஏற்படும் என்று நான் அப்போது குறிப்பிட்டிருந்தேன். அதையே உங்களுக்கும் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். இதனை நீங்கள் உங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்திட வேண்டும்.

**பொதுமக்களைச் சந்திப்பதற்கு பார்வையாளர் நேரம் ஒதுக்கிடுவீர்!**

மக்களாட்சி தத்துவத்தின்படி, மக்கள்தான் நமது எஜமானர்கள். அவர்களுக்கு சேவை ஆற்றிடத்தான் நாம் அனைவரும் பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகிறோம். இதனை நீங்கள் ஒருபோதும் மறந்திடக் கூடாது. ஒருசில மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்களை பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் தவிர, மற்ற நாட்களில் சந்திக்க இயலாத நிலை உள்ளது என்று அறிகிறேன்.

இது சரியல்ல. தலைமையகத்தில் நீங்கள் இருக்கும் நாட்களில் பொது மக்களைச் சந்திப்பதற்கு பார்வையாளர்கள் நேரம் என ஒதுக்கி, அவர்களைக் கட்டாயம் சந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை விபத்துகள், இயற்கைப் பேரிடர்கள் ஏற்படும்போது நீங்களே களத்திற்குச் செல்ல வேண்டும். மக்களை மீட்டு நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு, அரசின் முகமாக; மக்களுக்கு உதவும் கரமாக நீங்கள் செயல்பட வேண்டும். நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வருவதால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் தொடங்குவதற்கு முன்னதாக உங்களது பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவையனைத்தையும், எவ்வளவு விரைவாகவும், சிறப்பாகவும் நடத்தி கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு பேரும், மரியாதையும் கிடைக்கும். திட்டங்களின் சுணக்கமும் தவறு ஏற்படுமானால், அதன் மீதான விமர்சனம் எங்கள் மீதுதான் வரும். தேர்தல் என்பதால், மிக அதிகமாகவே வரும். உங்கள் கவனத்திற்கு வரும் புகாரை உடனடியாக களையுங்கள். அதை செய்தாலே விமர்சனங்கள் வராது. இதை மனதில் வைத்து செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் நீங்கள் தெரிவித்த ஆலோசனைகளும், கருத்துக்களும் அரசின் கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, நிறைவாக, இந்தக் கூட்டத்தில் சில அறிவிப்புகளை தற்போது வெளியிட விரும்புகிறேன்.

முதலாவதாக, அரசுப் பள்ளி மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தற்போது மாணவர் ஒருவருக்கு மாதந்தோறும் உணவுக்காக வழங்கப்பட்டு வரும் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து, ரூபாய் ஆயிரத்து நானூறாக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல், அரசுக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலுவோருக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூபாய் ஆயிரத்து நூறு என்பது இனி ஆயிரத்து ஐநூறு ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 1,71,844 மாணவ மாணவியர் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு 68 கோடியே 77 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இதனை கல்விக்காக செய்யும் ஒரு முதலீடு என்று கருதியே இந்த அரசு இதனை மேற்கொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, காவல் துறை அலுவலர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துகளின்படி, கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டு, மறுவாழ்வு பெறுவோர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 50 ஆயிரமாக வழங்கப்படும்.

மூன்றாவதாக, விசாரணைக் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்து வருவதில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளதால், அதனைக் களைய மாண்பமை உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்று வீடியோ கான்பரன்சிங் முறையினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

நான்காவதாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளை பழுதுநீக்கம் செய்து சீரமைக்க சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும்.

ஐந்தாவதாக, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்த தேவையான அனுமதிகளை வழங்க தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு வழிகாட்டுக் குழு அமைக்கப்படும். இந்த அறிவிப்புகளோடு, சிறப்பாகப் பணியாற்றி வரும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், மாவட்ட வன அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## முக்கிய அறிவிப்புகள்!

● முதலாவதாக, அரசுப் பள்ளி மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தற்போது மாணவர் ஒருவருக்கு மாதந்தோறும் உணவுக்காக வழங்கப்பட்டு வரும் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து, ரூபாய் ஆயிரத்து நானூறாக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல், அரசுக் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலுவோருக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூபாய் ஆயிரத்து நூறு என்பது இனி ஆயிரத்து ஐநூறு ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 1,71,844 மாணவ – மாணவியர் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு 68 கோடியே 77 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். இதனை கல்விக்காக செய்யும் ஒரு முதலீடு என்று கருதியே இந்த அரசு இதனை மேற்கொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

● இரண்டாவதாக, காவல் துறை அலுவலர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துகளின்படி, கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டு, மறுவாழ்வு பெறுவோர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து, ரூபாய் 50 ஆயிரமாக வழங்கப்படும்.

● மூன்றாவதாக, விசாரணைக் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்து வருவதில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளதால், அதனைக் களைய மாண்பமை உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்று வீடியோகான்பரன்சிங் முறையினைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

● நான்காவதாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளை பழுதுநீக்கம் செய்து சீரமைக்க சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும்.

● ஐந்தாவதாக, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்த தேவையான அனுமதிகளை வழங்க தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு வழிகாட்டுக் குழு அமைக்கப்படும்.

# தொழில் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

- முதல் பக்கத் தொடர்ச்சி

நிறுவனங்களையோ அல்லது விரிவாக்கத் திட்டங்களையோ நிறுவியுள்ளன. உற்பத்தித் துறையில், உலக அளவில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு. இவ்வாறான GCC மற்றும் ஆராய்ச்சி & மேம்பாடு ஆகிய துறைகளில், நல்ல வளர்ச்சி பெற்று வருவது மாநிலத்திற்குப் பெருமை அளிக்கக்கூடிய ஒன்று. மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பயனை ஏற்படுத்தும். இந்த வேகத்தில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதைக் காணும் போது, "2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் பொருளாதார மாநிலம்" என்ற எங்கள் இலக்கினை அடையும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்து கொண்டே போகிறது.

தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் வழிகாட்டுதலுடன், மாநிலப் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை சார்பில் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. யஅப்போது கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்து, ஊடகங்கள் சிறப்புக் கட்டுரைகளை எழுதி இருந்தன.

தமிழ்நாடு வெகு விரைவில் 1 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைந்திடும் என்று ஊடகங்கள் கூறியுள்ளது எங்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. நான் அரசுமுறைப் பயணமாக ஜப்பான் நாட்டிற்குச் சென்ற போது, எனக்குக் கிடைத்திட்ட வரவேற்பும் உற்சாகமும், நான் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேனோ என்று ஒரு நிமிடம் என்னை யோசிக்க வைத்தது. தமிழ்நாட்டிற்கும், ஜப்பானுக்குமான தொடர்புகள் மிக மிக அதிகம். தமிழ்நாட்டில், அதிக அளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகிறார்கள்.

இந்தியாவுக்குள், தமிழ்நாடு எப்போதுமே, ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த முன்னணி மாநிலமாக விளங்குகிறது. ஹிட்டாச்சி உட்பட, எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளார்கள்.

**அதிநவீன தொழில்நுட்பம் அறிமுகம்! ஹிட்டாச்சிக்கு பாராட்டு!**

ஜப்பான் இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ், இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. அந்த வரிசையில், ஹிட்டாச்சி நிறுவனம் தனது தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவி வருவதோடு மட்டுமின்றி, அவற்றைப் பெருமளவில் விரிவாக்கம் மேற்கொண்டு வருவதும் மகிழ்ச்சி தருகிறது. சென்னையில் வரவிருக்கும் இதுபோன்ற உலகத் தரம் வாய்ந்த புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப மையங்கள், நமது உள்ளூர் திறன்களுக்கு உலக அளவில் எவ்வளவு வாய்ப்புகள் உள்ளன என்பதற்கான எடுத்துக்காட்டு. இந்த அதிநவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதற்காக ஹிட்டாச்சி எரிசக்தி நிறுவனத்திற்கு என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையம் அவர்களின் உள்ளடக்கிய வளர்ச்சிப் பயணத்திற்கு உறுதுணையாக நின்று, அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிவகுத்திட வேண்டும். அதன் மூலம், உங்களின் எதிர்காலத் திட்டங்களை, தமிழ்நாட்டில் மேலும், மேலும் நிறுவிட வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

3 லட்சம் சதுர அடியில் அமைய உள்ள இந்த புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையத்தில், 50,000 சதுர அடியில், சிறப்பு ஆய்வகமும் அமைத்துள்ளது. எரிசக்தித் துறையில், நிபுணத்துவம் பெற்ற மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட உயர்தர வேலைவாய்ப்புகளை இந்தத் திட்டம் வழங்க உள்ளது.

**தொழில் முனைவோர்க்கு மேம்பட்ட தொழில் நுட்பங்களில் பயிற்சி!**

இந்தத் திட்டத்தின் மூலமாக 2500 பேர்களுக்கு உயர் வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோருக்கு, அதிநவீன மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்திட நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மேம்பட்ட உற்பத்தி முறைகளுக்கான திறன்மிகு மையங்கள், தொழில் புத்தாக்க மையங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தசோ சிஸ்டம், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த சீமென்ஸ் மற்றும் அமெரிக்கா நாட்டு நிறுவனமான ஜி.இ.ஏவியேஷன் உடன் இணைந்து இந்த மையங்களை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காக்களில் உலகத்தரம் வாய்ந்த தொழில் புத்தாக்க மையமும் அமைக்கப்பட்டு உள்ளன.

**ஜனவரியில் - சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு!**

இந்த வசதிவாய்ப்புகளை அனைத்துத் தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி தங்களின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வருகிற ஜனவரி மாதம் சென்னையில் நடத்த இருக்கிறோம். உலகம் முழுவதும் இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கின்றன. அதற்கு முன்னதாகவே ஹிட்டாச்சி நிறுவனம் இந்தத் தொழில்நுட்ப மையத்தைத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

பொதுவாக முதலீடுகளை ஈர்ப்பதற்கு நிறுவனங்களுக்கு அரசு அழைப்பு விடுப்பது ஒரு நடைமுறை! ஆனால் ஹிட்டாச்சி போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டுடனும், தமிழ்நாடு அரசுடனும் நெருக்கமான நிறுவனமாக இருக்கின்ற காரணத்தால், அழைப்பு விடுக்கத் தேவையில்லை. உங்களைப் போன்ற நிறுவனங்களுடன் இணைந்துதான் முதலீட்டாளர் மாநாட்டை நாங்கள் நடத்தயிருக்கிறோம். உங்களைப் போன்ற பிற ஜப்பானிய தொழில் நிறுவனங்களையும் அந்த மாநாட்டில் பங்கேற்கச் செய்வீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன். உங்களது தொழில் முயற்சிகள் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### காளையார் கோவிலில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

# பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

## கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - சீ.பிரதீப் பங்கேற்பு!

சிவகங்கை. அக்.6-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. பல்வேறு அணிகள் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் இன்று 6 ஆம் தேதி மாவட்ட பொறியாளர் அணி சார்பில் காளையார் கோவிலில் பொறியாளர் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெறுகிறது.

இன்று (6.10.2023-வெள்ளி) காலை 9.30 அணி அளவில் காளையார் கோவில் புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் ஏ. ஆர். முருகப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் நெல்லை மண்டல பொறுப்பாளர் சி. பிரதீப், ஆகியோர் முன்னிலையில் பேச்சுப்போட்டி நடைபெறுகிறது. இந்த பேச்சு போட்டியில் மாவட்ட முழுவதிலுமிருந்து பொறியாளர் மாணவ -மாணவிகள் பங்கேற்கிறார்கள். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றி பரிசு வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் மைக்கேல் கல்லூரி தாளாளர் ஸ்டாலின் ஆரோக்கியராஜ், ஒன்றிய செயலாளர்கள் ஆர். எம். கென்னடி, யோககிருஸ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

மாவட்ட அளவில் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ-மாணவிகள் மாநில அளவில் நடைபெறும்போட்டியில் பங்கேற்கிறார்கள்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் ஏ.ஆர். முருகப்பன் தலைமையில் துணை அமைப்பாளர்கள் செய்து வருகிறார்கள்.

---

### மகளிர் உரிமை மாநாடு

# இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

இராமநாதபுரம்,அக்.6-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிக்கை வருமாறு:-

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின் நூற்றாண்டையொட்டி, கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களால் கழக மகளிர் அணி சார்பில் 14.10.2023 (சனிக்கிழமை) அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் 'மகளிர் உரிமை மாநாடு' பிரமாண்டமாக நடைபெற உள்ளது.இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமை உரையாற்றுகிறார். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்கள், காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் மகளிர் தலைவர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.



பெண்ணுரிமைப் போற்றும் இந்த மாநாட்டில் இராமநாதபுரம் மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள். ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளைக் கழக, வார்டு கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கழக மகளிர் அணியைச் சேர்ந்த மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மகளிர் பிரதிநிதிகள், மாணவிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் திறந்து வைக்கிறார்!

# தென்காசி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம் திறப்பு!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

தென்காசி, அக்.6-

தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் ஏ.வி.ஆர். எம்.வி. திருமண மஹால் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.அதற்கான திறப்பு விழா நிகழ்வு இன்று (6.10.2023-வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி அளவில் நடைபெறுகிறது.

நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று மாவட்ட கழக அலுவலகத்தை திறந்து வைக்கிறார் என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகம் திறப்பு விழா நிகழ்வு இன்று (6ம் தேதி) மாலையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.



இராமச்சந்திரன் பங்கேற்று அலுவலகத்தை திறந்து வைத்து கழக கொடியேற்றி சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### கலைஞர் நூற்றாண்டு விழா! பெரம்பலூர் மாவட்டத்தில்

# பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி!

## மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை!

பெரம்பலூர்,அக். 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெறுவது குறித்து மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட பொறியாளர் அணி சார்பில் பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெறுகிறது. (6.10.2023 -வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில், பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரியில் நடைபெறும் பேச்சுப் போட்டிக்கு, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார் தலைமை வகிக்கிறார். பொறியாளர் அணி மாவட்ட தலைவர் பி.எஸ். வேல்முருகன் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா,

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் பி.செல்லசாமி, கே.பெரியசாமி, ஆர்.ரவிச்சந்திரன், இரா. ராஜாராம், ஜி.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்தப் போட்டியில் சட்டமன்றத் தொகுதிகளில் முதல் மூன்று இடத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு,

முதல் பரிசாக ரூ.10,000. வழங்கப்படும்.

இரண்டாம் பரிசாக ரூ.5,000 வழங்கப்படும்.

மூன்றாம் பரிசாகரூ.3,000. வழங்கப்படும். மேலும் மாநில அளவில் முதல் பரிசு பெறுபவர்களுக்கு ரூ. 5 லட்சம் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச்செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் ஊராட்சி தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். மாநகரச் செயலாளர் ப.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆர்.சதாசிவன், என்.தாமரை பாரதி, ஏ.ஆர். பூதலிங்கம், எஸ்.கரோலின், ஆலிவர் தாஸ், ஐ.சேட்சன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

### முதல்வர் தலைமையில் மகளிர் உரிமை மாநாடு!

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் -மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, அக்.6-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் ஊராட்சி தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் 04.10.2023 அன்று மாலை 4.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். சதாசிவன், என். தாமரைபாரதி, மாவட்ட துணை செயலாளர்கள் ஏ.ஆர். பூதலிங்கம், திருமதி. எஸ். கரோலின் ஆலிவர்தாஸ், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன் உட்பட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் ஊராட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கழக மூத்த முன்னோடியும், மொழிப்போர் தியாகியுமான ப.தி. செல்வம் அவர்கள் உடல் நலக்குறைவால் 04.10.2023 அன்று காலமானார். அன்னாரின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

01.01.2024ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது. மேலும் 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும், பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு தினங்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைபெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் ஒப்படைக்க வேண்டும்.

அதன் அடிப்படையில் 2024ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி 18 வயது பூர்த்தியானவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் விபரத்தை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்பொழுதுள்ள பட்டியலில் இருந்து நீக்கிடவும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட, மாநகர, ஒன்றிய,



நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA 2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நாடாளுமன்ற தேர்தலில் "நாற்பதும் நமதே, நாடும் நமதே" என்று வலியுறுத்தி வரும் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் அவர்கள் சுட்டி காட்டுகின்ற வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய இன்றே தீவிரமாக களப்பணி ஆற்றிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கூட்டுறவு சங்க தேர்தலில் புதிய உறுப்பினர்களை சேர்க்க 20.10.2023 கடைசி நாளாகும். எனவே கூட்டுறவு சங்க தேர்தலில் நமது உறுப்பினர்கள் அதிக அளவில் வெற்றி பெற உடனடியாக அதிக உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் எனவும் மேலும் 27.10.2023 அன்று கூட்டுறவு சங்க உறுப்பினர் விவர பட்டியல் வெளியிடப்படுவதால் விரைவாக உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

அக்டோபர் 14ம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் வைத்து மகளிர் உரிமை மாநாடு நடைபெற உள்ளது. பெண்ணுரிமைப் போற்றும் இந்த மாநாட்டில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திலிருந்து கட்சியின் மகளிர் அணியை சார்ந்த அனைவரையும், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளையும் மற்றும் அனைத்து மகளிர் சகோதரிகளையும் கலந்து கொள்ள செய்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நெல்லை மத்திய மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை கூறி உரையாற்றினார். உடன் தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், கிரிஜா குமார், மாநகர செயலாளர் சுப்பிரமணியன், தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லெட்சுமணன், பேச்சிபாண்டியன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மீரான் மைதீன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.10.2023) சென்னை, தீவுத் திடலில் நடைபெற்ற விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா/ தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 148 பெண் ஓட்டுநர்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சாக்களை வழங்கும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற –

# 148 பெண் ஓட்டுநர்கள் - 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக்சா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக். 6-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (5.10.2023) சென்னை, தீவுத் திடலில் நடைபெற்ற விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா/ தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 148 பெண் ஓட்டுநர்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சாக்களை வழங்கும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதன் விபரம் வருமாறு:-

2022-2023 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில் "தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்கள், சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கவும், அவர்களின் வருமானம் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டும், 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா 1 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முதலமைச்சர் அவர்களால் 10.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில், பத்து பெண் பயனாளிகளுக்கு புதிய ஆட்டோ ரிக்சாக் களுக்கான பதிவு ஆவணங்கள் மற்றும் அனுமதி ஆவணங்கள் வழங்கப்பட்டு இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், 15.08.2023 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கை ஓட்டுநர்களுக்கும் இம்மானியத் திட்டத்தினை நீட்டித்து அறிவிப்பு வெளியிட்டார்.

அதன் தொடர்ச்சியாக, வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு மின்சாரம் / சி.என்.ஜி. / எல்.பி.ஜி. மூலம் இயங்கக் கூடிய ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்க தலா 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தினை தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கும், திருநங்கை ஓட்டுநர்களுக்கும் நீட்டித்து 16.08.2023 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, சென்னை, தீவுத்திடலில் நேற்று நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் அவர்கள் 148 பெண் ஓட்டுநர்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா / தொழில்முறை டாக்சி வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சா வாகனங்களை வழங்கும் விதமாக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும், பெண் ஓட்டுநர்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கினார்.

இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்த் ரமேஷ், ஏ. எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கழக இளைஞர் அணிக்கு அதிக உறுப்பினர் சேர்க்க முடிவு!

## வடமதுரை ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

திண்டுக்கல், அக். 6 -

வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை ஒன்றிய செயற்குழுக் கூட்டம்

வடமதுரை வடமதுரை சுப்பா நாயுடு திருமண மகாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அவைத்தலைவர் முனியப்பன் , வட மதுரை ஒன்றிய கழகச் செயலாளர் போ. சுப்பையன் மற்றும் வடமதுரை பேரூர் கழகச் செயலாளர் கணேசன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் கழகத்தின் இளைஞர் அணி உறுப்பினர் அதிக அளவில் சேர்த்தல், இளைஞரணி மாநாட்டு ஏற்பாடுகள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நாடாளு மன்ற தேர்தல் வியூகம், வருகின்ற நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு நவம்பர் 4, 5, 14, 15 ஆகிய தேதிகளில் வாக்காளர் களை சேர்த்தல் நீக்குதல் சிறப்பு முகாம் அமைத்து அதில் புதிய வாக்காளர்களை அதிகப்படியாக சேர்த்தல், கூட்டுறவு சங்கங்களில் அதிகப்படியான புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் மாவட்ட , ஒன்றிய , பேரூர் , கிளை கழக நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் பட்டாசுக் கடையில் விபத்து!

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.6 -

மயிலாடுதுறை, தில்லையாடி கிராமத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தின ருக்கு நிதி உதவி வழங்கி, முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம், பொறையார் காவல் சரகம், தில்லையாடி கிராமத்தில் செயல்பட்டு வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசுக் கடையில் 4.10.2023 அன்று மதியம் வெடிகளை பார்சல் செய்யும்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் கிடங்கல் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம், மயிலாடுதுறையைச் சேர்ந்த மதன், மகேஷ் மற்றும் ராகவன் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். மேலும், இவ்விபத்தில் காய மடைந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 4 நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழுந்த வர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமை! மதுரை மாநகர் மாவட்டம் - 58வது வட்டத்தில்

# 10,000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் பி.மூர்த்தி - பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் வழங்குகின்றனர் !

மதுரை, அக்.6-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மதுரை மாநகர் மாவட்டம், 58வது வட்டக் கழகம் சார்பில் 10,000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (07.10.2023-சனிக்கிழமை) காலை 9 மணியளவில் மேலப் பொன்னகரம், 2வது தெரு புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மாமன்ற குழுத் தலைவர் மா.ஜெயராம் வரவேற்கிறார்.

எஸ்.எஸ்.மாறன், சீனிரமேஷ், கப்பல் எஸ்.வி. ஜான், ஆர்.ராகவேந்திரன், நல்லாசிரியர் டாக்டர் மா.இராஜாராம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், பொன் முத்து ராமலிங்கம், வ. வேலுச்சாமி, பெ.குழந்தை வேலு, கே. தனசெல்வம், மேயர் இந்திராணி பொன்வசந்த், மா.ஒச்சுபாலு, ஜெ.மூவேந்திரன், சி.சின்னம்மாள், எஸ்.ராகவன், ஆர்.முருகவேல், அக்ரி.கணேசன், ஆர்.கணேசன், பி.பாக்கியநாதன், சி.வீரகணேசன், ஏ.ஆர்.சௌந்தர்ராஜன், பி.டி.மணிமாறன், டி.ஆர். ரவீந்திரன் வைகைபரமன், எம்.ஜி.முத்தகணேசன், எம்.செய்யது அபுதாகிர், எஸ். அருண்குமார், ஏ.கே. ஆறுமுகம், விஜயலெட்சுமி பாண்டியன் , பி.மின்னல்கொடி, பொன். மு.சேதுராமலிங்கம், திலீபன் சக்கரவர்த்தி, பி. பாண்டிசெல்வி, வாசுகி முருகேசன், எம். முகேஷ்சர்மா, அ.சரவணபுவனேஸ்வரி, சுவிதா விமல், ஆ.க. தவமணி, கு. காவேரி, சு.பா. கண்ணன், ஆர்.அன்பழகன், போஸ்முத்தையா, எஸ்.வி.சுதன், டி.ஏ. குரும்பன், ஜி.ராதாகிருஷ்ணன், பி. அறிவுநிதி, எம்.சரவணப்பாண்டியன், பி.கே. செந்தில், அ.அன்வர் உசேன், ப.ஜீவன் ரமேஷ், அ. கிருஷ்டிஜீவன், எஸ். சித்திக், ஆர்.கே.ஜெயராமன், கே.எஸ்.ராஜாமணி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பி.எம்.ராஜா, கி.சட்சிதானந்தம், பி.ஆர்.சி.அன்புக்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டியில் நடைபெற்றுவரும் ஊராட்சி மன்ற கட்டிட பணியை ஆய்வு செய்தார். அருகில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்களின் துணைபதிவாளர் அன்பரசு, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி சத்தியபுவணா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் முத்துச்சாமி உட்பட பலர் உள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் 3 தொகுதிகளில் விவசாய கருத்தரங்கம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!



நெல்லை, அக். 6 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும்

நெல்லை கிழக்கு மாவட்ட விவசாய அணி மற்றும் விவசாய தொழிலாளர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு விவசாயிகள் கருத்தரங்கம் அம்பாசமுத்திரம் தொகுதி, இராதாபுரம் தொகுதி, நாங்குநேரி தொகுதி ஆகிய 3 தொகுதிகளில் நடைபெறுகிறது என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 3 தொகுதியில் நடைபெறும் இடம் குறித்து அவர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதன்படி நாளை (07. 10.2023 - சனிக்கிழமை) அம்பாசமுத்திரம் தொகுதிக்கு அம்பாசமுத்திரம் கிருஷ்ணா மஹாலில் வைத்து காலை 10 மணிக்கும்.

இராதாபுரம் தொகுதிக்கு 10.10.2023 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு திசையன்விளை வைகறை திருமண மண்டபத்தில் வைத்தும்.

17.10.2023 - செவ்வாய்க் கிழமை நாங்குநேரி தொகுதிக்கு களக்காடு அருணா திருமண மண்டபத்தில் வைத்து மாலை 4:00 மணிக்கு நடைபெறுகிறது.

மேற்கண்ட அட்டவணையில் உள்ளவாறு நடைபெற உள்ள கருத்தரங்கில் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள்,விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டு கருத்துக்களை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அந்தந்த பகுதிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு, கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட, மாநில, சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கழகத் தோழர்கள்,திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், முறையூர் ஊராட்சியில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் பெரியகருப்பன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜீத் ஆகியோரால் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற உறுதிமொழி கிராம மக்களுடன் ஏற்கப்பட்டது.



தமிழ்நாடு – சிங்கப்பூர் நட்புறவுக் கழகத்தின் சார்பில் சிங்கப்பூர் தந்தை லீ – குவான் –யூ பிறந்தநாள் விழா சென்னையில் நடைபெற்றது. அவ்விழாவில் லெ.இரஜனிகாந்துக்கு "வாழ் நாள் சாதனையாளர்" விருதுக்குரிய வெள்ளிக் கேடயத்தை சுப.வீரபாண்டியன் வழங்கினார். உடன் கவிஞர்.கா.முருகையன், மாம்பலம் ஆ.சந்திரசேகர், சோழ நாச்சியார் இராசசேகர், முனைவர்.நா.சந்திரபாபு, தஞ்சை.கூத்தரசன், அத்திப்பட்டு சாம்ராஜ், மெ.சண்முகம் ஆகியோர் உள்ளார்.



கலைஞர் 100
1924 - 2023
06.10.2023
தாய் கழகம் சார்பில்
தஞ்சையில் நடைபெறும்
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்
நூற்றாண்டு விழா மற்றும்
பாராட்டு விழாவிற்கு
வருகை தரும்...
தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்
மாண்புமிகு. தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே..
வருக! வாழ்க!! வெல்க!!!
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
அன்பில் மகேஷ்பொய்யாமொழி
சு.கல்யாணசுந்தரம்
தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர்,
நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்
துரை.சந்திரசேகரன்
தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளர்,
திருவையாறு சட்டமன்ற உறுப்பினர்
கா.அண்ணாதுரை
தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர்,
பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்
தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்ட தி.மு.க



06.10.2023 திராவிடர் கழகத்தின் சார்பில்
நடைபெறும் பாராட்டு விழாவிற்கு
தஞ்சைக்கு வருகை தரும்
சமூக நீதி
காவலரே!
வருக! வருக!!
மாண்புமிகு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
பள்ளிக்கல்வி துறை அமைச்சர், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. துரை.சந்திரசேகரன் MLA
தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. S.S.பழநிமாணிக்கம் MP
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
உயர்திரு. T.K.G.நீலமேகம் MLA
செயற்குழு உறுப்பினர்
மேயர்
சண்.இராமநாதன் MBA
தஞ்சை மாநகர செயலாளர்
தஞ்சை மாநகர தி.மு.க, மத்திய மாவட்டம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான விருதினை முதல்வர் அவர்கள் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப. ஜெயசீலன் அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்வு

# பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீனுக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!



சென்னை, அக் 6 –

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு முதலமைச்சரும் - கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், தனது சமூக வலைதளப் பக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்ந்த கல்விப்புலமையும், நெடிய அனுபவமும் கொண்ட அவரது அரசியல் பணி மேலும் சிறக்கவும்; வெற்றிகள் பெறவும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### சொத்துவரியை

## அக். 30க்குள் செலுத்த வேண்டும்!

சென்னை, அக். 6 –

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் முதல் அரையாண்டுக்கான சொத்து வரியினை ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரையிலும், இரண்டாம் அரையாண்டுக்கான சொத்துவரியினை அக்டோபர் 1 முதல் மார்ச் 31 வரையிலும் செலுத்த வேண்டும்.

மேலும், முதல் அரையாண்டு சொத்துவரியினை ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்ளாகவும், இரண்டாம் அரையாண்டு சொத்துவரியினை அக்டோபர் 30ஆம் தேதிக்குள்ளாகவும் செலுத்தும் சொத்து உரிமையாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 5 சதவீத ஊக்கத்தொகை அதிகபட்சம் ரூ.5 ஆயிரம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சொத்து உரிமையாளர்கள் இரண்டாம் அரையாண்டுக்கான சொத்துவரியினை அக்டோபர் மாதம் 30ஆம் தேதிக்குள் செலுத்தி, 5 சதவீத ஊக்கத்தொகை அதிகபட்சம் ரூ.5 ஆயிரம் வரை பெற்று பயனடையுமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.







## திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சையில் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில்! முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்புரை!

சென்னை,அக்.6-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சை மாநகரில் எழுச்சியுடன் இன்று (6.10.2023) மாலை நடைபெறுகிறது.

தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. வரவேற்பு தோரணங்கள், கழகக்கொடிகள் அமைக்கப்பட்டு உற்சாக மிகுதியில் தஞ்சை மாநகரம் திகழ்கிறது. திராவிடர் கழகம், தி.மு.க. உள்ளிட்ட சமூகநீதியில் அக்கறைகொண்டுள்ளவர்கள் தங்களின் குடும்ப விழாவாக கருதி விழாவுக்கு திரள்கின்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, ‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா திராவிடர் கழகத்தின் சார்பில் இன்று (6.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5:00 முதல் 8:30 வரை தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி மாநாட்டு அரங்கத்தில் தஞ்சை எஸ்.என்.எம். உபயதுல்லா நினைவரங்கம் இராஜகிரி கோ. தங்கராசு நினைவு மேடையில் நடைபெறுகிறது.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு, பொதுச் செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், வீ. அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

**‘தாய் வீட்டில் கலைஞர்’ நூல் வெளியீடு!**

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த ‘தாய் வீட்டில் கலைஞர்’ நூலை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட, முதல் படியை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெற்றுக் கொள்கிறார். தஞ்சை மத்திய தி.மு.க. மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் -நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் - சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சை மாநகர தி.மு.க.செயலாளர், - மேயர் சண்.இராமநாதன், தி.மு.க. மருத்துவரணி மாநில துணைச் செயலாளர் - துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி ஆகியோர் நூலைப் பெற்றுக்கொள்கின்றனர்.

**விழாவில் பாராட்டுரை!**

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி, மேற்கு வங்க மாநில மேனாள் தலைமைச் செயலாளர் ஜி.பாலச்சந்திரன் அய்.ஏ.எஸ்., தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார் ஆகியோர் பாராட்டுரை ஆற்றுகின்றனர்.

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாத் தலைமையேற்று சிறப்புரை, பாராட்டுரை ஆற்றுகிறார்.

‘சமூகநீதிக்கான சரித்திர நாயகர்’ தமிழ்நாடு முதலமைச்சர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுரை ஏற்புரை ஆற்றுகிறார்.

தஞ்சாவூர் மாவட்ட கழகத் தலைவர் வழக்குரைஞர் சி.அமர்சிங் நன்றியுரை ஆற்றுகிறார்.

கழகத் துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் இணைப்புரை வழங்குகிறார்.

விழாவில், தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எல்.கணேசன், தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணா துரை, மயிலாடுதுறை தொகுதி நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் செ.இராம லிங்கம், அரசு தலைமைக் கொறடா சட்டமன்ற உறுப்பினர் முனைவர் கோவி.செழியன், தி.மு.க.தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார், து.செல்வம், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், சட்டமன்ற மேனாள் உறுப்பினர் கே.டி. மகேஷ் கிருஷ்ண சாமி, தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் ச.இறைவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர், தி.மு.க. உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சை ஒன்றியக் குழுத் தலைவர், தி.மு.க. வைஜெயந்திமாலா கேசவன் உள்பட தி.மு.க. பொறுப்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

விழாவில் திராவிடர் கழகப்பொறுப்பாளர்கள் பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி, வெளியுறவுச் செயலாளர் கோ.கருணாநிதி, துணைப் பொதுச்செயலாளர்கள் பொறியாளர் ச. இன்பக்கனி, வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி, வழக்குரைஞரணி தலைவர் வழக்குரைஞர் த.வீர சேகரன், தொழிலாளரணி மாநிலச் செயலாளர் மு.சேகர், மாநில கிராமப் பிரச்சாரக் குழு அமைப்பாளர் முனைவர் அதிரடி க.அன்பழகன், திராவிடர் விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலாளர் குடவாசல் க.வீரையன், மாநில இளைஞரணிச் செயலாளர் த.சீ.இளந்திரையன், திராவிட மாணவர் கழக மாநிலச் செயலாளர் இரா.செந்தூரபாண்டியன், மாநில மகளிரணிச் செயலாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, திராவிட மகளிர் பாசறை மாநிலச் செயலாளர் வழக்குரைஞர் பா. மணியம்மை, கழகக் காப்பாளர்கள் வெ. ஜெயராமன், மு.அய்யனார், தலைமைக் கழக அமைப்பாளர் குடந்தை க.குருசாமி, தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருணகிரி, மன்னார்குடி மாவட்டத் தலைவர் ஆர்.பி.எஸ். சித்தார்த்தன், பட்டுக்கோட்டை மாவட்டத் தலைவர் பெ.வீரையன், கும்பகோணம் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் கு.நிம்மதி, பட்டுக்கோட்டை மாவட்டச் செயலாளர் வை. சிதம்பரம், கும்பகோணம் மாவட்டச் செயலாளர் சு.துரைராஜ், மன்னார்குடி மாவட்டச் செயலாளர் கோ.கணேசன், தஞ்சை மாநகரத் தலைவர் பா.நரேந்திரன், தஞ்சை மாநகரச் செயலாளர் அ.டேவிட் வரவேற்பாளர்களாக களப் பணி ஆற்றுகின்றனர்.

**‘திராவிடமே வெல்லும்’ கலை நிகழ்ச்சிகள்!**

மாலை 5.00 மணிக்கு தெற்குநத்தம் சித்தார்த்தன், உறந்தை கருங்குயில் கணேசன், திருத்தணி பன்னீர்செல்வம் இணைந்து வழங்கும் ‘திராவிடமே வெல்லும்!’ பெரியார் கல்வி நிறுவனங்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. திராவிடர் கழக தலைமை நிலையம் விழாவை ஒருங்கிணைத்துள்ளது.



நேற்று (05.10.2023) சென்னை, தலைமைச் செயலகம், வேளாண்மை துறை கூட்டரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் “எழுத்தாளர் – கலைஞர்” என்ற குழுவின் கூட்டம், இக்குழுவின் தலைவரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், உறுப்பினர் செயலரும், சமூகநலத் துறை ஆணையருமான திருமதி வே.அமுதவல்லி, உறுப்பினர்கள் ஆர்.பூரணலிங்கம், ஆர். பாலகிருஷ்ணன், ஏ.எஸ். பன்னீர்செல்வன், கலாப்பிரியா. எஸ்.ராமகிருஷ்ணன், திருமாவேலன், இமையம், அறிவுமதி, வி.எம்.எஸ்.சுபகுணராஜன், கவிஞர் சல்மா, தமிழ்மகன், பொதியவெற்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இரா.ஆவுடையப்பன் - மா.செல்வராஜ் தலைமையில்

# தென்காசி மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## ஈ.ராஜா எம்.எல்.ஏ. - சதன் திருமலைக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி.அக்.6-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் “சட்டமன்ற நாயகர்கலைஞர்” விழா குழு சார்பில் தென்காசி மாவட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் தொகுதி சுப்பிரமணியபுரத்தில் வியாச மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டி.என்.புதுக்குடி புளியங்குடி இந்து நாடார் உறவின்முறை கமிட்டி மேல்நிலைப் பள்ளி, தென்காசி தொகுதி சுரண்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் கலைஞர் அவர்களின் சாதனைகள் பற்றிய பேச்சு போட்டிகள் விழா குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டப்பேரவை தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் சட்டப்பேரவை செயலாளர் மா.செல்வராஜ் ஆகியோர் பங்கேற்று போட்டிகளை நடத்தினார்கள்.

முதலாவதாக வாசுதேவநல்லூர் தொகுதி சுப்பிரமணியபுரம் வியாச மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வு முன்னாள் சட்டப்பேரவை தலைவர் இரா.ஆவுடையப்பன் முன்னாள் பேரவைச் செயலாளர் மா.செல்வராஜ் ஆகியோர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலைகுமார், (வாசுதேவநல்லூர்) சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் நாகராஜன், நெல்லை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, ஆகியோர்முன்னிலையில் நடைபெற்றது.கல்லூரி முதல்வர் ஈஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

பேராசிரியர் சாரதா நெல்லை நாயகி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கணிதத் துறை பிரிவு மாணவி கு.காவியப்ரியா ‘கலைஞர் படைப்புகளில் சமூக நீதி’ என்ற தலைப்பிலும்,தமிழ்த்துறை பிரிவு மாணவி க.சூர்யகலா ‘தமிழ் மொழியின் எழுச்சிக்கு கலைஞர் செய்த சீர் திருத்தங்கள்’ என்ற தலைப்பிலும், வணிகவியல் பிரிவு மாணவி மு. சாஜிதா ‘மகளிர் நலனில் கலைஞர்’ என்ற தலைப்பிலும்,இயற்பியல் பிரிவு மாணவி ம.செ.அமல் சாதிய்யா ‘சமச்சீர் கல்வியை கொண்டு வந்தது’ என்ற தலைப்பிலும்,விலங்கியல்துறை பிரிவு மாணவி க.ம. ஜஹ்ரா ‘தமிழ் வழிக் கல்வியை கட்டாயமாக்கியது’ என்ற தலைப்பிலும் ஆகிய 5 மாணவிகள் பேச்சு போட்டியில் பங்கேற்றனர்.

இதில் முதல் பரிசு காவிய பிரியாவுக்கு ரூபாய் 3000 ரொக்க பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்,2வது பரிசு சூர்யகலா ரூபாய் 2000 தொடக்கம் பரிசு மற்றும் சான்றிதழ்,3 வந்து பரிசு சாஜிதா ரூபாய் 1000,ம் ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்,மாணவிகள் அமல் சாதிய்யா, ஜஹரா ஆகியோருக்கு சான்றிதழ் ஆகியவற்றை சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா.ஆவுடையப்பன் வழங்கினார்.

பின்னர் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா.ஆவுடையப்பன் பேசியதாவது:-

கலைஞர் அவர்களின் சட்டமன்ற வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா பள்ளி, கல்லூரிகளில் நடத்த முதலமைச்சர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். இங்கு பேசிய 5 மாணவிகளும் சிறப்பாக பேசினார்கள்.ஆற்றல்மிக்க மாணவிகளாக உள்ளனர். கலைஞரை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.அவரது சாதனைகள் பற்றி நீங்கள் பேச வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் இந்த கருத்தரங்கு நிகழ்வை நடத்த உத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.அதற்காக எங்களை நியமனம் செய்துள்ளார்கள்.

கலைஞரை பற்றி வித்தியாசமான தலைப்புகளை எடுத்துக்கொண்டு மிகவும் அருமையாக சகோதரிகள் பேசினார்கள்.அவர்களை நான் பாராட்டுகிறேன்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை முதலமைச்சராகவும் பதவி வகித்தவர் அவர் காட்டிய வழியில் தான் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.தமிழகத்தின் ஆட்சியும் அவர் காட்டிய வழியில் தான் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. நீங்களும் கலைஞர் மாதிரி வர வேண்டும்.அரசின் திட்டங்கள்,மக்கள் பிரச்சினைகள் மற்றும் அரசியல் சூழ்நிலைகளை குறித்து மாணவர் அறிந்து கொள்ள வேண்டும்.இந்த ஆட்சியில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 16 பேரூராட்சிகளிலும் பெண்களே தலைவர்களாக உள்ளனர். அதுபோல 7 ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்களில் 6 பேர் பெண்கள் உள்ளனர்.முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு உள்ளாட்சியில் 50 சதவீதம் கொடுத்துள்ளார்கள். தற்போது நடைபெறும் ஆட்சி பெண்களுக்கான ஆட்சி.அதாவது முதலமைச்சர் அவர்களின் “திராவிட மாடல்” ஆட்சியாக நல்ல ஆட்சியாக நடத்தி வருகிறார்கள்.

பொது வாழ்வுக்கு நீங்களும் வரவேண்டும்.நீங்கள் எதிர்காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக வரலாம்.தமிழ் மொழி குறித்து எந்த நேரமும் சிந்திப்பவர் கலைஞர் அவர்கள்.அவரது வழியில் அவரது எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் எங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாறு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா.ஆவுடையப்பன் பேசினார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் தலைவர் வெள்ளத்துரை பாண்டியன், நிர்வாக இயக்குனர் வெள்ளத்தாய்,கல்லூரி செயலாளர் சுந்தர்,ம.தி.மு.க துணை பொது செயலாளர் தி.மு.ராஜேந்திரன் சிவகிரி வட்டாட்சியர் ஆனந்தன்,உள்பட கல்லூரி பேராசிரியர்கள் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் சட்டப்பேரவை இணை செயலாளர் சாந்தி நன்றி உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து டி.என்.புதுக்குடி புளியங்குடி இந்து நாடார் உறவின்முறை கமிட்டி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பில் பேசிய மாணவி எழிலரசி அரசு மேல்நிலைப்பள்ளி வாசுதேவநல்லூர் முதல் இடத்தையும்,கரிவலம்வந்த நல்லூர் மாணவி கவிஷா 2வது இடத்தையும்,சேர்ந்தமரம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் ராமர் 3 வது இடத்தையும் பெற்றனர். இவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா. ஆவுடையப்பன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து தென்காசி தொகுதி சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா.ஆவுடையப்பன் சட்டப்பேரவை முன்னாள் செயலாளர் செல்வராஜ் ஆகியோர் பங்கேற்று இளங்கலை பிரிவு மாணவி மாரீஸ்வரி ‘கல்வி சேவையில் கலைஞர்’ என்ற தலைப்பில் பேசினார் அவருக்கு முதல் பரிசும் சான்றிதழும், நுண்ணுயிரியல் பிரிவு மாணவர் அருண்குமார் ‘சமத்துவம் கண்ட சரித்திர நாயகன் கலைஞர்’ என்ற தலைப்பிலும் அவருக்கு 2வது பரிசும் சான்றிதழும், வேதியல் பிரிவு மாணவி வீரலட்சுமி ‘மகளிர் நலனில் மகத்தான சாதனை’ என்ற தலைப்பிலும், அவருக்கு 3வது பரிசும் சான்றிதழும், அதனைத் தொடர்ந்து மாணவி சத்தியகுமாரி ‘சமூக நீதி கண்ட கலைஞர்’ என்ற தலைப்பிலும்,மாணவர் தினேஷ் குமார் ‘தமிழ் வளர்ச்சியில் கலைஞர்’ என்ற தலைப்பிலும் பேசினர். அவர்களுக்கும் சான்றிதழ்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி பழனி நாடார் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் நாகராஜன்,இணை செயலாளர் சாந்தி,

மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, நெல்லை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் பாஸ்கரன், காமராஜர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சின்னத்தாய் உள்பட கல்லூரி பேராசிரியர்கள் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் “சட்டமன்ற நாயகன் கலைஞர்” விழா குழு சார்பில் தென்காசி மாவட்டம் தென்காசி தொகுதி சுரண்டையில் உள்ள காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் இரா.ஆவுடையப்பன் உரையாற்றினார்.உடன் சட்டப்பேரவை முன்னாள் செயலாளர் செல்வராஜ், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் அமைச்சர் தங்கவேலு, பழனி நாடார் எம்.எல்.ஏ.சட்ட பேரவை கூடுதல் செயலாளர் நாகராஜன்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் தென்காசி தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,கல்லூரி முதல்வர் சின்னத்தாய் உள்பட பலர் உள்ளனர்.

## கலைஞர் வழிநின்று மகளிருக்கு மாதம் ரூ.ஆயிரம் வழங்கி கவுரவப்படுத்தியுள்ளார் நம் முதல்வர்!

# ஒன்றிய அரசு பெண்களுக்கு 33 சத இடஒதுக்கீட்டை உடனே நிறைவேற்ற வேண்டும்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் அறிக்கை!

சென்னை, அக். 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிநின்று நமது முதல்வர் தளபதி அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைக் கொண்டுவந்து மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கி கவுரவப்படுத்தியுள்ளார். இன்று ஒன்றிய அரசு பெண்களுக்கு 33 சத விகித இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்துள்ளதை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

வரலாறு காணாத சரித்திரத்தை படைத்து 1989ல் பெண்களுக்கு சொத் துரிமை அளித்து சம உரிமை உண்டு என்ற சட்டத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர். அதுபோல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 1996ம் ஆண்டில் 33% இடஒதுக்கீடு கொடுத்து அரசியல் அதிகாரத்தை பெண்களுக்கு அளித்து பெண்களை அரியணையில் அமர வைத்தவர் நமது தலைவர் கலைஞர். இது மட்டுமல்லாமல் காவல்துறையில் மகளிர் காவல்நிலையங்களை உருவாக்கியவர் நமது தலைவர் கலைஞர். இன்றும் தலைவர் கலைஞர் அறிமுகம் செய்து வைத்த மகளிர் சுயஉதவி குழுக்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. ஏழை வீட்டு பெண்கள் டி.வி இல்லாததை அறிந்து எல்லோர் வீட்டிலும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளை கொடுத்து அனைவரும் நடப்பு செய்திகளை தெரிந்து கொள்வதற்காகவே குடும்பதலைவிகளுக்கு கிடைத்த இந்த பெரியசொத்து இந்த இலவச டிவி திட்டம் மற்றும் இலவச கேஸ் இணைப்பு என்று பெண்களுக்கு உண்டான எல்லா சலுகைகளையும் அள்ளி வழங்கியவர் நமது தலைவர் மட்டுமே.

தலைவர் கலைஞர் வழியில் நமது மாநில முதலமைச்சர் தளபதி அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1,000/- இவ்வாறு திட்டத்தை அறிவித்ததை பிற மாநிலங்களும் வியந்தன.

இவ்வாறு தமிழ்நாட்டு பெண்களுக்கு 33% சதவீத இடஒதுக்கீட்டை அன்றே அள்ளி கொடுத்தவர் நமது தமிழின தலைவர். அதே போல் அரசியலில் கண்ணியம் கட்டுப்பாடு மேடையில் என்று அரசியல் நாகரிகத்தை கடைப்பிடித்து, தன்னுடைய தொண்டர்களும் அவ்வழியே செல்ல வேண்டும் என்று நினைத்தவர் நமது கலைஞர். அரசியல் விரோதம் என்று இல்லாமல் அனைத்து தரப்பட்ட இயக்கங்களுக்கு எப்போதும் உதவி கரம் நீட்டியவர் நமது தலைவர்.

இவையெல்லாம் தலைவரின் மாண்பு, பண்பு என்று வரலாறு சிறப்புமிக்க குணங்கள், இதை இன்று துள்ளி குதிக்கும் பிஜேபி தலைவர்கள் அறிய வேண்டும். ஆதலால் பிஜேபி கொண்டு வந்த 33 சதவீத பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதே நமது திராவிட இயக்கத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி.ஓவியம் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**அரங்கத்துறை**

கலைஞர் 100 1924 - 2023

அ.து.ந.க.எண்.அ3 / 727 / 2023 **மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் - 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்களுக்கு விளையாட்டுத்திடல் பயிற்சியாளர்கள் (Play Ground Instructors) நியமனம் செய்யும் பணி

**பணியின் உத்தேச தொகை ரூ.76.26 இலட்சம்**
**முன்வைப்பு தொகை : பணியின் மதிப்பில் 1% ரூ.77,000/-**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் **26.10.2023 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் **27.10.2023 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5407 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (பூ(ம)வி)**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 1**

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.1.ந.க.எண் பி2/04338/2023 **மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

**கீழ்காணும் பணிக்கு மண்டல அலுவலர்-1 அவர்களால் கோரப்படுகிறது**

மண்டலம்-1, 2023-24 ஆம் ஆண்டு **மூலதன நிதியின் கீழ்** பகுதி 1, வார்டு எண்-2 கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் கலந்து கொள்ளலாம்

**முன்வைப்பு தொகை ரூ.82060/-**

**ஒப்பம் சமர்ப்பிக்கும் நாள் : 12.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை**

**ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 13.10.2023 பிற்பகல் 3.30 மணி**

**மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 5408 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மண்டல அலுவலர் - 1**



திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சு.பொலக்குணம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சட்டபேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு பொது மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். ஒன்றியச் செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், ஊராட்சிமன்ற தலைவர் குப்புஜெயக்குமார், கிளைகழக செயலாளர்கள் ஜெயபால், ரவீந்திரன், கார்த்திகேயன், ராமன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், கிளை கழக பொருளாளர் பாலு, ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் முருகன், மாணவரணி துணை அமைப்பாளர் மதுரை பாண்டியன், காசிவேல், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனார்.

### அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர,பேரூர்

# மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

அரியலூர், அக். 6-

அரியலூர் மாவட்டத்தில் தி.மு.க. மாணவர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல் இன்று (06.10.2023 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் அரியலூர் புற வழிச் சாலையில் உள்ள வாணி மகாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில மாணவரணி தலைவர் இரா. ராஜீவ் காந்தி மற்றும் மாநில மாணவரணி செயலாளர் வி.எம். ஆனந்த் கலந்து கொண்டு நேர்காணல் நடத்துகிறார்கள், அது போது ஒன்றிய, நகர, பேரூர் மாணவரணி பொறுப்பிற்கு விண்ணப் பித்துள்ளவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு: 1. நேர்காணலில் கலந்து கொள்ள வருபவர்கள் தங்களது வயது சான்றிதழ் கட்டாயம் கொண்டுவரவும்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் - அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில்

# ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் 8 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், அக். 6 -

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

ரூ.4.70 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 8 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களின் செயல்பாட்டினை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்ததாவது:-

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் சுமார் 3,000 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும் இக்கல்லூரியில் பேராசிரியர்கள், பணியாளர்கள் 200 க்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆக மொத்தம் 3,200 மேற்பட்ட மாணவ, மாணவியர்கள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் வழங்கும் பொருட்டு, கல்லூரி வளாகத்திலுள்ள முதன்மை கட்டடம், வேதியியல் துறை, தாவரவியல் துறை, இயற்பியல் துறை, கணிதம் மற்றும் கணினி அறிவியல் துறை, நூலகம் மற்றும் சிற்றுண்டி கூடம் ஆகிய 8 இடங்களில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் 8 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள் 1 மணி நேரத்திற்கு 100 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாகும். மேலும் குளிர்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கும் வசதியும் கொண்டதாகும்.

இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ள 8 குடிநீர் சுத்தி கரிப்பு இயந்திரங்களை மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், எதிர்காலத்தில் இக்கல்லூரியில் பயில வரும் மாணவ, மாணவியர்களுக்கும் பயன்படுகிற வகையில் பாதுகாப்புடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ராஜா, மோகனூர் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.நவலடி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கருநாடக மாநில தி.மு.க. துணை அமைப்புகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் குழுக்கூட்டம்!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி அறிக்கை!

கருநாடகா, அக். 6 -

கருநாடக மாநில அமைப்பாளர் ந.இராமசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரும் 8.10.2023ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாநில தி.மு.க கலைஞரகம் வளாகத்தில் மாநில தி.மு.க அமைப்பாளர் முன்னிலையில் இளைஞர் அணி, இலக்கிய அணி, மகளிர் அணி, தொ.மு.ச பேரவை, நிர்வாகிகளின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெறும் விழாவில் கலைஞர் நூற்றாண்டு விழா தி.மு.க பவளவிழா இவ்வாண்டு முழுக்க சிறப்பாக கொண்டாட தலைமைக் கழகம் அறிவித்திருப்பதற்கிணங்க சிறப்பாக செயல்படுத்திட நம் மாநிலத்தில் இயங்கும் மாநில தி.மு.க துணை அமைப்புகளின் சார்பில் விழா கூட்டங்கள், நடத்திட முடிவெடுக்க நிர்வாகிகள் அனைவரும் எக்காரணத்தைகொண்டும் தவிர்க்காமல் ஆலோசனைக் குழவில் கலந்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கருநாடக மாநில அமைப்பாளர்ந.இராமசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயல் வீரர்கள் கூடம் மதுரை தெற்கு மாவட்டம் முத்தப்பன்பட்டி சேடபட்டியார் திடலில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, சேலம் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்து தொகுதி பொறுப்பாளர்கள் சாயல்குடி ராமர், மாரியப்பன் கென்னடி, இலக்குவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றிய போது எடுத்தபடம். உடன் திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

### கிராமங்களை முன்னேற்ற பல்வேறு திட்டங்களை

# தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு!

## முறையூர் கிராம சபைக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிங்கம்புணரி, அக். 6 -

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், முறையூர் ஊராட்சியில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, முறையூர் ஊராட்சி மன்றத்தலைவர் என்.எம்.சுரேஷ் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் முன்னிலையில் கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பங்கேற்றார். கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பனுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் என்.எம்.சுரேஷ் தலைமையில் மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் கணேசன், ஒன்றியச் செயலாளர் பூமிநாதன் பாலசுப்ரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் அம்பலமுத்து, சோமசுந்தரம், சிங்கம்புணரி நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் பிரம்மாண்ட வரவேற்பு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறுகையில், தேசபிதா காந்தியடிகளின் பிறந்த நாளினை முன்னிட்டு, நாடு முழுவதும் அனைத்து ஊராட்சிகளிலும் கிராமச் சபைக் கூட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தொழிலாளர் தினம், சுதந்திர தினம், குடியரசு தினம், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த தினம், ஆகிய 4 நாட்களில் கிராமச் சபைக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. கிராமத்தில் நடைபெற்ற பணிகள், அப்பணியின் முன்னேற்றம், புதியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் ஆகியன குறித்து மக்களுடன் கலந்து கலந்துரையாடி செயல்படுத்துவதற்கென ஆண்டிற்கு நான்கு முறை கிராமச்சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**புத்துயிர் ஊட்டியுள்ளது!**

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆண்டிற்கு 6 முறை கிராமச்சபைக் கூட்டங்கள் நடத்திட சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டு, இவ்வறிவிப்பு ஊரக வளர்ச்சித் துறைக்கும், உள்ளாட்சி அமைப்பிற்கும் புத்துயிர் ஊட்டியுள்ளது. இக்கிராமச் சபைக் கூட்டத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த முதன்மை அலுவலர்கள் தங்களின் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கின்றனர். இதனை ஊராட்சியைச் சார்ந்த பொதுமக்கள் கருத்தில் கொண்டு, அரசின் திட்டங்கள் மூலம் பயன் பெறலாம். ஒரு வளமான கிராமத்தை உருவாக்குவதற்கு மக்களுடன் இணைந்து இணக்கமான முறையில் பணியாற்றி, கிராமத்தின் வளர்ச்சிக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றுவது ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரின் கடமையாகும்.

இந்த கிராமச்சபைக் கூட்டத்தின் முக்கிய நோக்கமே, மகாத்மாகாந்தி ஏற்கனவே குறிப்பிட்டது போல் கிராமங்கள் தான் ஒரு நாட்டிற்கு முதுகெலும்பாகும். அதுபோல் ஒரு நாடு வலுவான வல்லரசு நாடாக வளர வேண்டும் என்றால் கிராமங்கள் வளர்ச்சி பெற்றவைகளாக, தன்னிறைவு பெற்றவைகளாக பொருளாதார ரீதியாக கல்வி, மருத்துவம், சுகாதாரம் ஆகிய எல்லாவற்றிலும் கிராமங்களில் அரசின் அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்பட்டால்தான் ஒரு நாடு வளர்ச்சி பெற்ற நாடாக கருதப்படும். குறிப்பாக, வறுமை இல்லாத மாநிலமாகவும், கல்வி அறிவு வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், தொழில் துறை வளர்ச்சி, வேளாண்மைத் துறையில் வளர்ச்சி, மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கி தனிநபர் வருமானத்தை உயர்த்தி பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெறும் வகையில் அதற்கான திட்டங்களை செயல்படுத்துவது அரசின் கடமையாகும்.

இதனை கருத்தில் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு உள்ளிட்ட அனைத்து அடிப்படை கட்டமைப்புக்களையும் மேம்படுத்துவதற்கென பல்வேறு நடவடிக்கைகளை அனைத்து பகுதிகளிலும் மேற்கொண்டு, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் பல்வேறு வளர்ச்சி பணிகளையும் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு, அதற்கான பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பெண்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன!**

மேலும், ஆணுக்கு நிகராக பெண்கள் அனைத்திலும் சிறந்து விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையில் அதற்கான திட்டங்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு புதுமைப் பெண் திட்டம் மற்றும் குடும்ப தலைவிகளுக்கு பயனுள்ள வகையில் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், இலவச பேருந்து பயணத் திட்டம் போன்ற திட்டங்கள் பெண்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளன.

மேலும், 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு காலை உணவுத் திட்டம் மற்றும் மாணாக்கர்களின் எதிர்காலத்திற்கு



பயனுள்ள வகையில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் நான் முதல்வன் திட்டம் போன்ற திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு, எதிர்கால இந்தியாவின் தூண்களாக விளங்கவுள்ள மாணாக்கர்களுக்ளுக்கான சிறப்பு திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மீண்டும் மஞ்சப்பை திட்டம்!**

இதனை பெற்றோர்கள் கருத்தில் கொண்டு, தங்களது பிள்ளைகளை உயர் கல்வி கற்பதற்கு தாங்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும். மேலும், ஒவ்வொரு பகுதியிலுள்ள மக்கள் பிரதிநிதிகள், அரசின் பல்வேறு திட்டங்களை தகுதியுடைய பயனாளிகளுக்கு கிடைக்கபெற செய்யும் வகையில் சிறப்பாக நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். இவ்வூராட்சியை பொருத்த வரையில் நடப்பாண்டில் மொத்தம் 28 வளர்ச்சி பணிகள் ரூ.76.39 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தங்களது பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் வளர்ச்சி பணிகள் குறித்து, சட்டமன்ற உறுப்பினராகிய என்னிடமோ அல்லது தங்களது பகுதிகளுக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புக்களின்பிரதிநிதிகளிடமோ எடுத்துரைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். .

மேலும், இக்கிராம மக்கள் ஒன்றிணைந்து பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு, பிளாஸ்டிக் இல்லாத தமிழகமாக உருவாக்குவதற்கென நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்து, மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின்படி விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். மேலும், ஊராட்சிகளின் சார்பில் குப்பைக்கழிவுகளை தங்களது இடங்களுக்கு வருகை தரும் தூய்மைப் பணியாளர்களிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்க வேண்டும். குறிப்பாக, கிராமச் சுகாதாரத்தினை பேணிக் காப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். தங்களது ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சுகாதார வளாகம் மற்றும் பொதுச் சொத்துக்களை முறையாக பராமரித்திட வேண்டும். ஊராட்சியின் வளர்ச்சிக்கேற்ப பொதுமக்களின் நலன்களை கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்களை வழங்க அரசு தயார் நிலையில் இருந்து வருகின்றன. பொதுமக்களாகிய நீங்கள் இதனை கருத்தில் கொண்டு, தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், ஊராட்சியின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்திட வேண்டுமென அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மைத்துறையின் சார்பில் தென்னங்கன்றுகள் பூச்சிக்கொல்லி தெளிப்பான் மற்றும் தோட்டக்கலைத் துறையின் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பழச்செடிகளின் தொகுப்புகள் மற்றும் மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு மஞ்சப்பை ஆகியவைகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்களால் “பெண் குழந்தைகளை காப்போம்!! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்!!!” என்ற உறுதிமொழி கிராம மக்களுடன் ஏற்கப்பட்டது.

முன்னதாக கிராம சபை கூட்டத்தில்தீர்மானங்களை ஊராட்சி செயலர் மதிவாணன் வாசித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சிவராமன், தேவகோட்டை வருவாய் கோட்டாட்சியர் பால்துரை, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) குமார், சிங்கம்புணரி வட்டாட்சியர் சாந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லெட்சுமணராஜ், ராஜேந்திர குமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மதிவாணன் ஒன்றிய கவுன்சிலர் சத்தியமூர்த்தி மற்றும் சிங்கம்புணரி ஒன்றிய துணை செயலாளர்கள் சீலா சொக்கநாதன், சிவபுரி சேகர், முத்துக்குமார் சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட துணை தலைவர் ஆனந்த கிருஷ்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில்,

அயலக அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் தருண் மெடிக்கல் புகழேந்தி, சூரக்குடி சிவசுப்பிரமணியன், ஒன்றியப் பொருளாளர் பாஸ்கரன், நகரப் பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் ராமநாதன், இளைஞர் விளையாட்டு அணி கோபால கண்ணன், சிங்கம்புணரி பார்த்திபன், வையாபுரி பட்டி ஜெயராமன், பிரேம் குமார், முறையூர் கிளைச் செயலாளர்கள் கரு கோபாலன் சாமியாடி சொக்கநாதன் மற்றும் முறையூர் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் பொன்னுச்சாமி, ஞானசுந்தரி, சின்னையா, செல்வ பிரியா, யோகேஸ்வரன், கற்பக வல்லி, பாண்டி மீனா, அருள்மொழி, மற்றும் கோவில் கண்காணிப்பாளர் மாணிக்கம் தங்கவேல் கருப்பையா பாஸ்கரன்,

முன்னாள் மாணவர் சங்கச் செயலாளர் ஜோதிமணி, ஆசிரியர் சின்னத்தம்பி, சக்திவேல், சந்திரன், பீர்முகமது, கரு செந்தில், ஜீவா, மருதுபாண்டி, சின்னத்தம்பி மணிகண்டன் சின்னையா, வீரபழனி, மணிவண்ணன், மருதிபட்டி வெங்கடேஷ் மற்றும் அனைத்து அரசுத்துறை முதல்நிலை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கதிரேசன் நன்றி உரையாற்றினார்.

### 29 வது வட்டச் செயலாளர் ப.ஆண்டவன் நிகழ்ச்சி ஏற்பாடு!

# பம்மல் வடக்குப் பகுதியில் பூத் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ.- கோ.காமராஜ் - த.ஜெயகுமார் - பா.டில்லி பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக்.6-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிக்கு உட்பட்ட ஏழு வார்டு களில் பூத் வாரியாக கழகச் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஜி.கே. குமார் தலைமை தாங்கினார். வட்டக் கழகச் செயலாளர் பி.ஆண்டவன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழகப் பிரதிநிதி பா. டெல்லி வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் தா.ஜெயக்குமார், பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன், துணைச் செயலாளர் மு.ஸ்ரீதர், மாணவர் பிரதிநிதி இரா. பாபு ஜி, வட்டக் கழக நிர்வாகிகள் இ.ஆர்.சுந்தர், கே.சதீஷ்குமார், ஜி.பாஸ்கர், ஜெ.விமலா, தி.அழகிரி, ஆர்.கண்ணன், எம்.ராமலிங்கம், சி.ருசிந்திரமணி, ஆர்.நந்தகுமார், ஏ. கிருபானந்தன் மற்றும் பி எல் ஏ 2 உறுப்பினர்கள் எஸ்.மோகனசுந்தர பாண்டியன், எஸ். செல்வராஜ் உள்ளிட்ட கழக முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

விழுப்புரம், அக். 6-

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவ மாணவிகளுக்கான இடைய கலைஞரின் வாழ்க்கை வரலாறு குறித்து பேச்சு போட்டிகள் திண்டிவனம் அண்ணா அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐடிஐ கல்லூரியிலிருந்து ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வரலாற்றுகளையும், தமிழக மக்களுக்கு கலைஞர் செய்த பல்வேறு சாதனைகளையும், திரைப்படத்துறைக்கு அவர் பணியாற்றிய சேவைகள் பற்றி எடுத்துரைத்தினர்.

இதைத் தொடர்ந்து போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி முதல் பரிசு பெற்ற மாணவருக்கு ரூபாய் 10,000 கேடயங்களையும் இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு பெற்றவர்களுக்கு தலா 5000 ரூபாய் 3000 மற்றும் கேடயங்கள் பாராட்டு சான்றுகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில்மாவட்ட அவைத் தலைவர் சேகர், பொருளாளர் ரமணன், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் கல்லூரி முதல்வர் தமிழழகன்,ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை. மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் தலைவர் சக்தி சரவணன், துணைத்தலைவர் ஏழுமலை, துணை அமைப்பாளர்கள் ஜி.பி. எஸ். முருகன், ரசூல் பாஷா, வெங்கடேச பெருமாள், சிவப்பிரகாசம், மலையரசன், மோகன்தாஸ், பிரபாகரன், சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆண்டிபட்டி அருகே தனியார் பொறியியல் கல்லூரியில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கேடயம், பரிசுகள் வழங்கினார்கள். உடன் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராம், பேரூர்ச் செயலாளர் சரவணன், தெற்கு மாவட்ட பொறியாளர் அணித் தலைவர் சசிகுமார், துணைத் தலைவர் முரளி, அமைப்பாளர் விஜய் பிரவீன், துணை அமைப்பாளர்கள் சிவா, கணேஷ், ஆரோக்கிய விஜய்குமார், விக்னேஷ், செல்லப்பாண்டி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மனித வள மேலாண்மை துறை சார்பில் 2022ஆம் ஆண்டிற்கான நல்லாளுமை விருதுகளை திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. ஆல்பி ஜான் வர்கீஸ், திண்டுக்கல் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச. விசாகன், மற்றும் திருநெல்வேலி முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.விஷ்ணு, ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மனித வள மேலாண்மை துறை சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான நல்லாளுமை விருதுகளை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரும், நாகப்பட்டினம் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவருமான டாக்டர் அ. அருண் தம்புராஜ், மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர், ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 2022ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்கான விருதுகளை தஞ்சாவூர் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மற்றும் நாகப்பட்டினம் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரும், தற்போதைய கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருமான டாக்டர் அ.அருண்தம்புராஜ், ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்கான விருதுகளை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். த. பிரபு சங்கர், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். மா. பிரதீப் குமார், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். கி. செந்தில் ராஜ், ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கான விருதுகளை விழுப்புரம் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் த. மோகன், தஞ்சாவூர் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மா. பிரதீப் குமார் ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், 2022–23ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு தொடர்பான நலத்திட்டங்கள் விருதுகளை நாகப்பட்டினம் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரும், தற்போதைய கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருமான டாக்டர் அ.அருண் தம்புராஜ், மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர், ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.




முரசொலி
பாசறை
மதுரை 06.10.2023

# திராவிட சினிமா

## 26

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்






# மணிமகுடம்

## தமிழ் சினிமாவின் திராவிட நாயகர்கள்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

**நா**ற்பதுகளின் பிற்பகுதியில் தமிழ் சினிமாவின் நாயகர்கள் பெரும்பாலும் திராவிட நாயகர்களாக இருந்தனர் என்பது கவனத்துக்குரியது. கே.ஆர்.ராமசாமி, என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஜி.ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன், எம்.ஆர்.ராதா என பிரபல நடிகர்கள் அனைவரும் நேரடியான திராவிடத் தொடர்பு கொண்டவர்கள் அல்லது தீவிர வெளிப்படையான ஆதரவாளர்கள்.

அநேகமாக சிவாஜி கணேசன் தடம்புரண்ட 1950-களின் பிற்பகுதி வரை, இந்த நிலையே தொடர்ந்தது. அவரும்கூடக் கட்சியிலிருந்து விலகிய பிறகும் கலைஞரது திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். இவர்களது திரைப்படங்கள் நேரடியான திராவிடக் கருத்தியல் பேசாதவையாக இருந்த போதும், என்.எஸ்.கே, எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர், எம்.ஆர்.ராதா உள்ளிட்டோர் தங்களது பகுத்தறிவுவாத சார்பை மறைமுகமாகவேனும் தொடர்ந்தனர்.

அனைத்து பிரபல நாயக நடிகர்களும் திராவிட சார்பாளர்கள் என்பதன் மறைமுக விளைவினைத் தனித்ததொரு ஆய்வாகவே செய்யவேண்டும். ஒரு அறிமுக நிலை ஆய்வுப் பார்வையில், பொதுவான இந்தப் போக்குக்குத் திரைப்படங்களில் பாவேந்தர் பாரதிதாசன், உடுமலை நாராயணக் கவி, மாயவநாதன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன் போன்றோர் இந்த நாயகர்களுக்காக எழுதிய பாடல்களும் பங்களித்தன.

### குரலில் வலிமை, நடிப்பில் குறைவு!

இப்போது இவர்கள் இல்லாமல் வேறு யார் தமிழ் சினிமாவில் பிரபலமான நாயக நடிகர்களாக இருந்தார்கள் எனும் கேள்வியைக் கேட்டுப் பார்த்தால், அதிர்ச்சி அடைய வாய்ப்பிருக்கிறது. மிகுந்த தேடுதலுக்குப் பிறகு ஜெமினி கணேசன் போன்ற ஓரிருவரை அடையாளப்படுத்தலாம். அவர்களும் வெகுசில படங்களில் மட்டுமே நடித்திருப்பர். மற்றபடி அவர்கள் பெரும்பாலும் இரண்டாம் நாயகர்களாகவே தொடர்ந்திருப்பர்.

கெடுவாய்ப்பாக இந்த இரண்டாம் நாயக நிலையில் தொடர வேண்டிய சூழல் எஸ்.எஸ்.ராஜேந்திரன் என்ற திராவிட நாயக நடிகருக்கும் நேர்ந்தது. சிவாஜி கணேசனுடன் அவரும் ‘பராசக்தி’ யில் அறிமுகமானவர்தான். அந்தப் படத்திலும் நாயகன் சிவாஜியைவிடக் கூடுதலான அழுத்தத்துடன் திராவிடக் கொள்கைகளை, திட்டங்களைப் பேசி கவனத்தை ஈர்த்திருப்பார்.

தமிழ் சினிமாவில் ‘கணீர்’ குரலில் உச்சரிப்புத் தெளிவுடன் அடுக்குமொழி தமிழ் பேசிய நாயகர்களில் சிவாஜி கணேசனுக்கு இணையானவர். சிவாஜி, எஸ்.எஸ்.ஆர், ஓ.ஏ.கே.தேவர் (அவரும் தி.மு.கழக நடிகர்தான்) ஆகியோரது குரல் சாத்தியங்களே கலைஞருக்கு ஓர் எழுச்சியான வசனப் போர்களை எழுதத் தூண்டியிருப்பதைக் காண முடியும்.

ஆனால், எஸ்.எஸ்.ஆர் முதல் நிலை நாயக நிலையை எட்ட இயலவில்லை. குரல் வலிமை நடிப்பில் கொஞ்சம் குறைவுதான். ஆனால், அறுபதுகளின் தொடக்கம் அவருக்கான நாயகத்துவ திரைப்படங்களை கலைஞர் உருவாக்கிக் கொடுத்தார். சென்ற வாரங்களில் கண்ட திரைப்படங்களின் பட்டியலே அதற்குச் சான்றாகும். எஸ்.எஸ்.ஆர் தீவிரமான கொள்கைப் பற்றானவராகவும் இருந்தார். தி.மு.க. சார்பில் தேர்தலில் நின்று 1962-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினரான தமிழ்நாட்டின் முதல் நடிகர் அவரே.

### திரைக்கதையும் இயக்குநரும்

1966-ஆம் ஆண்டு வெளியான **‘மணிமகுடம்’** திரைப்படமும் அவற்றில் ஒன்று. கலைஞர் எழுதி பலமுறை அரங்கேறிய நாடகத்தை எஸ்.எஸ்.ஆர் அவர்கள் திரைப்பட வடிவில் உருவாக்கியிருந்தார். அவரது முதல் இயக்குநர் முயற்சி.

கதைக்களம் எளிமையானதும் நேரடியானதும்தான். மன்னனின் அதிகாரத்தை மோசடியாகக் கையாண்டு, மக்களை வதைக்கும் குருநாதர் (நம்பியார்), திவான் (எஸ்.ஏ.நடராஜன்), படைத்தளபதி கூட்டணி. மணிபல்லவபுரியின் மக்கள் விடுதலைக்காக வன்முறையற்ற வழிகளில் போராடும் மன்றம். மன்றத்தின் தலைமை அல்லி (விஜயகுமாரி), ஆலோசகர் பி.எஸ்.வீரப்பா.

**‘ஐயாயிரம் குடிசைகளை அழித்துவிட்டு ஆலயம் கேட்பது ஆண்டவனாக இருக்க முடியாது’; போராளி புரட்சிக்கவி, அரச பரம்பரையே அழிக்கப்பட வேண்டும்.**

அநீதியான அரசனின் ஆணையால், கொல்லப்பட்ட அண்ணன் உள்ளிட்ட ஐந்து போராளிகளின் மரணத்துக்குப் பலி வாங்க அக்காவும் தங்கையும் (ஜெயலலிதா) முனைந்து களம் காண்கின்றனர். படத்தில், பெண்களின் செயலூக்கமான நடவடிக்கைகள் திராவிட மாடல் சினிமாவின் இன்னொரு உதாரணம். மன்னன் தனது தவற்றை உணர்ந்து நாசகார கூட்டத்தின் சதியை முறியடித்து, நாட்டில் மக்களாட்சி மலரச் செய்கிறான்.

### எம்.ஜி.ஆர் பாணியை முயன்ற எஸ்.எஸ்.ஆர்

மன்னன் மணிமாறனின் மாற்றுத் திட்டங்களில் பல மாறுவேடப் புனைவுகள். அந்தப் புனைவினை உண்மையென நம்பும் அக்கா அல்லி, புதுமைப்பித்தன் எனும் புரட்சிக்காரனைக் காதலிக்க, தங்கை ஜெயலலிதா அரசனை மயக்கி, அரண்மனைக்குள் புகுந்து பழிவாங்கத் திட்டமிட்டு, மன்னனின் நற்குணங்கள் அறிந்து காதலில் வீழ்கிறாள்.

இரண்டு நாயகிகள், ‘தாடி ஒட்டி’ மாறுவேடம் எனும் சரக்குகள் ஏற்கெனவே எம்.ஜி.ஆர் பாணியாக மாறி உறுதியாகியிருந்த நிலையில், எஸ்.எஸ்.ஆர் இயக்கம் அதனைத் தனதாக்கிக் கொள்ள முயன்றிருப்பது வெளிப்படை. போதாக்குறைக்கு எம்.ஜி.ஆர் நாயகியாகி விட்டிருந்த ஜெயலலிதாவை தனக்கு ஜோடியாக்கியது அடுத்தப் பிழை. இது மட்டுமல்ல, நாடகப் பிரதியைத் தன்னை முதன்மை நாயகனாக்கும் முயற்சிக்குப் பலவாறாக மாற்றியமைத்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர் போலவே எந்தவித ‘கெட்டப் பழக்கமும்’ இல்லாத, மக்கள் நலன் கருதும் மன்னன். ஏன் தன்னைச் சுற்றியுள்ள சதி வலையை அறியாமல் இருக்கிறான் என்பதற்கு, எந்தத் தெளிவான காரணமும் பேசப்படுவதில்லை. அதேபோல அதிகாரம் கொண்ட மன்னன், ஏன் பிரபுக்கள் அவைக்கு வராமல் இருக்கிறான். அந்த அவையில், அவன் முடிவாக ஆணையாக (போலி ஆணைகள்) நிறைவேற்றப்படும் அநீதிகளைத் தடுக்க நேரடியான அதிகாரத்தைப் பயன்படுத்தாமல், போராட்டக்காரர்கள் மன்றத்தினரிடம் ஏன் இணைகிறான் என்பதற்கும் ஒரே விடைதான்.

தனக்கான நாயகத்துவ உருவாக்க முனைப்புத் திரைக்கதையில் பல குழப்பங்களை உருவாக்கி விட்டிருக்கிறது. அதன் விளைவாக, திரைப்படத்தின் வெற்றி மற்றும் நாயகத்துவ உருவாக்கம் ஆகிய இரு தளங்களிலும் எதிர்பார்த்தது நிகழவில்லை.

### பலமான திரைக்கதை, பலவீனமான இயக்கம்

திரைக்கதை உருவாக்கம் ஒரு தடம் என்றால், அதனைச் செழுமைப்படுத்தும் பணி இயக்குநருடையது. திரைப்படத்தின் மையப் பொருளான **எளியவர்களின் வாழ்விடத்தை அழித்து, ஆண்டவனுக்கு ஆலயம் கட்டும் அதிகாரம் எனும் இன்றும் பொருந்தும் களம் முறையாகக் கையாளப் படவில்லை.** இத்தனைக்கும் கலைஞரின் முத்திரை வரிகள் ஏராளம்.

‘ஐயாயிரம் குடிசைகளை அழித்துவிட்டு ஆலயம் கேட்பது ஆண்டவனாக இருக்க முடியாது’; போராளி புரட்சிக்கவி, அரச பரம்பரையே அழிக்கப்பட வேண்டும். அரச பரம்பரையை ஒழிப்பதென்றால், புராண காலத்து பரசுராமன் போல கையில் கோடாரியேந்தி கண்டவரைக் கொன்று குவிப்பதல்ல. அழிப்பதென்றால், மன்னன் பற்றிய மூடநம்பிக்கைகள் நீக்கப்பட்டு, மக்களாட்சி மலர்வதற்கான மனப்பாங்கை உருவாக்குவதுதான்’.

ஆம், திராவிடத்தின் ‘ஒழிப்பு’ நடவடிக்கை, அன்றும் இன்றும், அது மன்னராட்சியானாலும், சனாதனமானாலும் வன்முறையை நாடாதது. பரசுராமன் வாரிசுகள் மற்றும் அவர்தம் எடுபிடிகள் இதை அறியமாட்டார்கள்.

...படம் விரியும்

---

### ஊடக அச்சுறுத்தல் ஒரு பாசிச நடவடிக்கை!

‘நியூஸ் க்ளிக்’ என்கிற ஊடகத்தினர் சீனாவுக்கு ஆதரவாகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்வதாகக் கூறி, அவர்களின் தொடர்புடைய இடங்களில் சோதனைகளைச் செய்ததுடன், அதன் தலைவர் பிரபிர் புர்கயஸ்தாவை டெல்லி போலீசார், சட்டவிரோதச் செயல்பாடுகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். முன்னதாக அந்த ஊடகத்துடன் தொடர்புடைய மூத்தப் பத்திரிகையாளர்கள் அனுராதா ராமன், சத்யம் திவாரி, அதித்தி நிகாம், சுமேதா பால் எனப் பலரும் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

மூத்தப் பத்திரிகையாளர் பரஞ்சோய் குஹாவிடம் ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் மைக்கை நீட்டியதும், அவர் ‘மோடிஜி ஒரு மகான்... வாங்க கேளுங்க... அதுதானே உங்களுக்கு வேணும். மோடிஜி கடவுளோட அவதாரம்... போதுமா?’ என மோடி மீடியாவைக் கிண்டல் செய்கிறார்.

நேர்மையான ஊடகவியலுக்கும், ஜால்ரா ஊடகவியலுக்கும் இடையிலான மோதலாக ‘நியூஸ் க்ளிக்’ மீதான அடக்குமுறை அமைந்துள்ளது, என எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. இந்தச் சூழலில் ‘நியூஸ் கிளிக்’ பத்திரிகையாளர்கள் நடந்துகொண்ட விதம் ஒரு நீண்ட வீரஞ்செறிந்த மரபின் தொடர்ச்சியே. ஊடகங்களை அச்சுறுத்தும் இந்தப் பாசிச நடவடிக்கையை முறியடிக்க இந்தியா தயாராகிறது.

---

### :ப்ளாஷ்பேக்




பாலசுதர்சனம்

### அறிவாலயத்தில் ஆசி!

**இ**ன்றைய காஞ்சிபுரம் மாவட்டம், 1995-இல் செங்கை அண்ணா மாவட்டமாக இருந்தது. அப்போது சித்தாமூர் ஒன்றியத்தைச் சேர்ந்த விவசாய அணி அமைப்பாளர்களும், துணை அமைப்பாளர்களும் தலைவர் கலைஞரை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 1995 ஏப்ரல் 5-ஆம் நாள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது, பேராசிரியர் அவர்களும் ஆற்காட்டார் அவர்களும் உடனிருந்தார்கள். விவசாய அணி துணை அமைப்பாளராக இருந்த எனது தந்தை கிருஷ்ணன், இந்தப் படத்தைக் காட்டித்தான் எங்களுக்குக் கட்சிப் பாசத்தை ஊட்டினார். அவரது மகனாக இன்றைக்கு நானும் கழகப் பணியைத் தொடர்கிறேன்.

**-கி.பாலசுதர்சனம்,**
**ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர், சித்தாமூர் ஒன்றியம்,**
**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

### கருவூலம்

#### தளராத முரசொலி

**1965-ஆம் ஆண்டு மார்ச் மாதம், முரசொலியில் வெளியான சில கட்டுரைகள், படங்கள் ஆகியவற்றைக் காரணம் காட்டி இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முரசொலி மாறன் கைது செய்யப்பட்டார். அதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கலைஞர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், ‘முரசொலி’ பணிகளைத் தொய்வில்லாமல் கவனித்து வந்தார், அப்போது துணையாசிரியராக இருந்த மாறன். அவரின் கைதுக்குப் பின்னரும், ஆசிரியர் பகுதியில் பணியாற்றிய அனைவரும் குழுவாக இணைந்து ‘முரசொலி’யில் எழுச்சி குறையாது பணியாற்றினர்.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 261




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.